உ

கடவுள் துணை.

# செந்தமிழ்

## மதுரைத்தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.—திருவள்ளுவர்.

[தொகுதி-௪] பராபவஹு புரட்டாசிமீ [பகுதி-௧௧

உள்ளுறை.


| | | |
|---|---|---|
| வேள்பாரி:— | பத்திராசிரியர். | ௫௬௯ |
| ஸ்ரீ பட்டர் வைபவம்:— | ஸ்ரீமத்-வை. மு. சடகோபராமாநுஜாசாரியர். | ௫௭௨ |
| இராமாவதாரச்செய்யுட் பாடாந்தரம்:— | ஸ்ரீமத்-சி. கணேசையர். | ௫௭௬ |
| மஹாபாரதம்:— | ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப் பிள்ளை. | ௫௮௨ |
| அன்பு.— | ஸ்ரீமத்-ஆத்மநாதன். | ௫௯௦ |
| பெரியபுராண அரும்பதவிளக்கம்:— நன்னூல் விருத்தியுரைக் குறிப்பு.— | ஸ்ரீமத்-ஜி. சதாசிவம் பிள்ளை. | ௫௯௪ ௬௦௫ |
| நல்லெழுக்கம்:— | ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள். | ௬௦௮ |
| பிரதமவிததியாப்பியாசப்பிரகடனம். | ஸ்ரீமத்-சே. இராஜகோபாலாசாரியர். B. A., | ௬௧௫ |
| பஞ்சதந்திரம்:— | ஸ்ரீமத்-கா. சிவசிதம்பரஐயர். | ௬௨௨ |
| புத்தகக்குறிப்பு:— | பத்திராசிரியர். | ௬௨௭ |



மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப் பதிப்பு.

[வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] 1906. [தனிப்பிரதி அணா 8.

திருச்சிற்றம்பலம்.

நம் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் "பாண்டியன் புத்தகசாலை"க்கு அடியிற்குறித்த அபிமான சிலர்கள் அச்சுப்பிரதிகள் உதவினமைக்குப் பெரிதும் நன்றி கூறுகின்றேன்.

## அச்சுப் பிரதிகள்.

1. விநோதரசமஞ்சரி.
2. திருப்பாவைவ்யாக்யாநம்.
3. தேவாரத்திரட்டு.
4. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்.
5. திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்.
6. திருவருணைக்கலம்பகம்
7. அருணகிரியந்தாதி.
8. பழமலையந்தாதி.
9. பொன்வண்ணத்தந்தாதி.
10 நால்வர் நான்மணிமாலை.
11. திருவேங்கடசதகம்.
12. தண்டலையார்சதகம்.
13. அறப்பளீசுரசதகம்.
14. குமரேசசதகம்.

} சென்னை ஸ்ரீமத் வி. நமபெருமாள் செட்டியார் அவர்கள்.

15. பகவத்கீதைவெண்பா:—ஸ்ரீமந் ஸ்ரீவாணீவிலாசனிப் பத்திராசிரியர்.

16. சிவஞானபாஷ்யம்.
17. திருக்குற்றாலத்தலபுராணம்.

} ஸ்ரீமத்-மு. ரா. அருணாசலக்கவிராயர், மதுரைத் தமிழ்சங்க நூற்பரிசோதகர்.

18. கருவூர்மான்மியம்:--ஸ்ரீமத் நா. கதிரைவேற்பிள்ளை, யாழ்ப்பாணம்.

19. பலதுறைககாரிகை.
20. நீதிசாரமூலமும் உரையும்.

} ஸ்ரீமத் கந்தசாமியவர்கள், திண்டிவனம்.

**பொ. பாண்டித்துரை.**

அக்கிராசனாதிபதி.

உ

கடவுள்துணை.

# செந்தமிழ்.

தொகுதி-ச] பராபவஹு புரட்டாசிமீ [பகுதி-கக

## வேள் பாரி.

பழைய வேளிருடைய வரலாறுகளுள்ளே, பாரியென்னும் வள்ளற்றலைவனுடைய சரித்திரம், இனிமையும் பெருமையும் இரக்கமுங் கொண்டு சிறப்பதாகும். மாரியன்னதம் வரையா ஈகையால் உலகமுள்ளவரையும் ஒன்குபுகழைநிறுவிய தமிழ்வள்ளல்களிலே இவனையே முதல்வனாகச் சொல்லல் தகும். தமிழ் மூவேந்தரும் மற்றைச்சிற்றரசர்களும்போல, இப்பாரி நாடும்பொருளும் நன்குபடைத்தவனில்லையாயினும், வள்ளன்மையில் அவரெல்லாரையும் தனக்குப் பெரிதும் கீழ்ப்படவைத்தமையால் இவனது பெருமை என்றும்விளங்குவதாயிற்று. இவனதுவள்ளன்மையையே கொடைப்பெருமைக்கு ஓர் எல்லைக்கல்லாகப் பிற்காலத்துப் பெரியோர்களும் குறித்துவைப்பாராயினர். எத்தனையோவள்ளல்கள் முன்னாளில் விளங்கியிருப்பினும், "கொடுக்கிலாதானைப் பாரியேயென்று கூறினுங் கொடுப்பாரிலை" என்னும் அருமைத் திருவாக்காற் சுட்டப்பட்டவன் இவனேயல்லனோ? இவன், முற்காலத்தே, புலவரையும் இரவலரையும் எவ்வாறு போற்றிவந்தவனென்பதும் பண்டைச்செந்தமிழ்ப்புலவர் இவனது தடங்கருணையையும் பெருங்கொடையையும் எவ்வாறு புகழ்ந்துள்ளாரென்பதும், பிறவரலாறுகளும் சங்கநூல்களில் இவனைப்பற்றிய பாடல்களை நோக்குவார்க்கு நன்குவிளங்கும். அந்நூல்களில் இவனது வாழ்க்கையைப்பற்றிக் கூறும்வரலாறுகளை ஒழுங்குபடுத்திச்சொல்லிப் பின், இவ்வள்ளல் விஷயமாக யானறிந்த சிலவிசேடங்களையும் எழுதுவேன்.

மூன்னூறு ஊர்களைக்கொண்ட பறம்பு அல்லது பறநாட்டிலே, அரண்வலி முதலிய பெருமைகளும் பல்வகைவளங்களுமுடைய பறம்பு அல்லதுபறமலையைத் தன் அரசிருக்கையாகக்கொண்டு, வேளிர் குலத்தலைவனான பாரி என்பான், 'வரையாதளிக்கும் பெருவள்ளல்' எனத் தமிழ்நாடு புகழ வாழ்ந்துவந்தான். இவன், மிக்க கொடையாளியும் மிழலைக்கூற்றத்துக்குத்தலைவனுமான வேள்-எவ்வி என்பவனுடைய வழித்தோன்றல். இப்பாரிக்கு அங்கவை சங்கவைஎன்னும் மகளிர் இருவர், எல்லாச்சிறப்புடன் கல்விச்சிறப்புடையராயுமிருந்தனர். அந்தணர் திலகராயும் புலவர் பெருமானாகவும் விளங்கிய கபிலர், இப்பாரிக்கு உயிர்த்தோழராக அமைந்தனர். பாரியுடைய பெருங்கருணையைவிளக்குதற்குச் சிறுகதை ஒன்றுண்டு. இவன் ஒருகால் தேரூர்ந்து காட்டுவழியே சென்றபோது, அங்கே முல்லைக் கொடி ஒன்று படர்தற்குக் கொழுகொம்பில்லாமல் தளர்ந்து நடுங்குவதுகண்டு, அவ்வோரறிவுயிரிடத்தும் உண்டாகிய தன் பேரருளால், அக்கொடி இனிதுபடரும்படி தான் ஏறிச்சென்ற பொற்றேரை யதன்பக்கத்தே நிறுத்திவிட்டு தன்மெல்லிய அடிகள் சிவக்குமாறு நடந்துசென்றனன் என்பர். இவ்வரலாறு, பழைய நூல்கள் பலவற்றிலும் புகழ்ந்து கூறப்பட்டுள்ளது. இவ்வாறே, இவன், நிழலில்லாத நீண்ட வழியில் தனிமரம்போல நின்று, தன்னையடைந்த புலவர், மடவர், வறியர், மெலியர் முதலிய யாவர்க்கும் தன் இன்னருள் சுரந்துவந்தமையால் இவன்புகழ் தமிழகமுழுதையும் தன் வயமாக்கிக் கொண்டது. இங்ஙனம், வேள்பாரி உலகம்புகழும் பெருவள்ளலாக விளங்கி நிற்ப, தமிழரசராகிய சேர சோழ பாண்டியர்மூவரும் இவனைத் தம் பகைவனாகக் கொண்டிருந்தனர். நன்மையன்றி வேறு செய்ய அறியாத இவ்வள்ளலிடம் இவ்வேந்தர் செற்றம் வைத்ததற்குக் காரணம் நன்கு அறியப்படவில்லையாயினும், தம்மினும் பாரிபடைத்த பெரும்புகழால் நிகழ்ந்த பொறாமையே அதன் காரணமாகவேண்டுமென்பது பல ஏதுக்களால் ஊகிக்கப்படுகின்றது. இவ்வாறு, பாரிக்கும் மூவேந்தர்க்கும் உள்ள பகைமைமுற்றிவளரவும், அவ்வேந்தர் ஒன்றுசேர்ந்து படையெடுத்துச் சென்று பாரியது பறம்புமலையை முற்றுகையிட்டனர். இந்நிலைக்குப் பாரி சிறிதுமஞ்சாமலும், அவர் தாக்குதலைப் பொருட்ப

டுத்தாமலும் ஊக்கத்தோடும் அவரை எதிர்த்து நின்றுன். அம்மு ற்றுகைக் காலத்தே, பாரிக்கு உயிர்த்தோழரான கபிலர், உள்ளே கிளிகள் பலவற்றை வளர்த்துப்பழக்கி, அரணுக்கு அப்புறமுள்ள விளைநிலங்களிலிருந்து நெற்கதிர்களை நாளுங்கொண்டுவரும்படி செய்து, பாரியின் குடிபடைகளைக்காத்துவந்தார். முற்றுகையிட்ட மூவேந்தரும் நெடுங்காலம்வரை வெற்றியின்றிப் பாரிசேனையாற் பரிபவப் பட்டிருக்க, அப்போது, புலவர் பெருமானுகிய கபிலர் வெளியே வந்து, அவ்வேந்தர் நாணும்படி அவரைநோக்கி,

"அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் முரசின் மூவிரு முற்றினும்
உழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரிபாய் தலின்மீ தழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றூரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே."

"கடந்தடு தானை மூவிருங் கூடி
யுடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே."

என்னும் பாடல்களைக்கூறி, "நீவிர் மூவரும் ஒன்றுகூடிப் படைவலி பெரிதுங்கொண்டு எத்தனையோ காலம் முற்றுகை செய்யினும் பாரியது இப்பறம்புமலையைக் கொள்ளுதல் அரிது; அவனுடைய முந்நூற்றூரையும் பாடிப் பரிசிலர் பெற்றதுபோல, நீவிரும் பாடினவராய் வரின் இதனைக்கொள்ளுதல் எளிது" என்று பாரியது புரவலர்க்கருமையும், இரவலர்க்கெளிமையுமாகிய பெருநிலையை அழகாகவெளியிட்டனர். இதன்மேல், அவ்வேந்தர் சூழ்ச்சிசெய்து, கபிலர் அறிவித்தபாரியியல்புக்குப் பொருந்துமாறு, தாமே பரிசிலர் வேடம் பூண்டோ, பிறரைப் பரிசிலராக விடுத்தோ அவனைத் தம்மகப்படும்படி செய்து வஞ்சித்துக் கொன்றுவிட்டனர்.

அந்தோ! பாரியுடைய உயிர்த்தோழராகிய கபிலர், அவனருமை மகளிர் இருவருடன், தம்மைப்போற்றிவந்த கருணைவள்ளலுக்கு நேர்ந்த அநியாயத்தை எண்ணிக் கலங்கி அவன் பிரிவை ஆற்றுமல் புலம்பி, அவன் அரசிருக்கையையும் அவன் பெருவாழ்வையும், அவன் கொடைச் சிறப்பையும், மற்றும் அவன் குணவிசேடங்களையும் நினைக்குந்தோறும் உள்ளம் நெக்குநெக்குருகித் தவித்தனர். இப்பரிதாப நிலையுடன், கபிலர், பாரிமகளிராகிய அங்கவைசங்கவையென்பாரைத்* தம்மோடு அழைத்துக்கொண்டு தாம்பழகியபறம்புமலையை விடமுடியாமலே விடுத்து, அம்மகளிர்க்குத் தக்க மணவாளரைத்தேடித் தம் நட்புக்கடனைக் கழிக்கச் செல்வாராயினர். முதலில், கபிலர், வேளிர் குலத்தவனாகிய இளவிச்சிக்கோவையும், பின் அக்குலத்து இருங்கோவேள் என்பானையுங் கண்டு, பாரிமகளிரை மணம் புரிந்துகொள்ளும்படி வேண்ட, அவ்விருவரும், பாரிக்கும் பெருவேந்தர் மூவர்க்கும் உண்டாகிய பகைமையைக் கருதிப்போலும் "முடியாது" என்று மறுத்துவிட்டார்கள். பின்பு அப்புலவர் செய்வதொன்றுமறியாமல் திகைத்து தம்வாழ்க்கையை முற்றும வெறுத்தவராய், திருக்கோவலூரில் தமக்கு வேண்டிய பார்ப்பார் சிலரது பாதுகாவலில் அம்மகளிருவரையும்வைத்துதாம்வடக்கே செ

* பாரியிறந்தபின் அவன் மனைவியையும் கபிலர் அழைத்துச்சென்றனரென்று கூறாமையால், அவள் தன்கணவனுடன் தீப்பாய்ந்து உயிர்நீத்தனள் போலும்!

ன்றூர். இச்செய்தி யெல்லாம் கேள்வியுற்ற நல்லிசைப்புலவராகிய ஔவையார், பெரிதும் வருந்தி, பெருவள்ளலாகிய பாரிமகளிரைத் தாமே சிறப்பிக்க வெண்ணி, அக்காலத்துத் திருக்கோயிலூரையாண்ட மலையமானாகிய தெய்வீகனுக்கு அவரை மணம் பேசி, அம்மணத்துக்கு மூவேந்தரையும் வரும்படி செய்வித்தும், பாரிகுடிக்கும் அவ்வேந்தர்க்கு மிருந்த பகைமையைப் போக்குவித்தும், தம் தெய்வத்தன்மையாற் பற்பல அற்புதச் செயல்களை நிகழ்த்தியும் அக்கலியாணத்தை விமரிசைபெற நிறைவேற்றி, பாரிமகளிரை நல்வாழ்வு பெற வைத்தனர். இவையே வேள்பாரியின் சரித்திரச்சுருக்கம். இக்கதையின் விரிவையும், அவற்றிற்குத்தக்க மேற்கோள்களையும் சேதுசம்ஸ்தானவித்வான் ஸ்ரீ: இராகவையங்காரவர்களது "ஔவையார்" "பாரிமகளிர்" என்னும் அரிய பெரிய வியாசங்களிற் காணலாம்.

இனி, பாரியுடைய நாடும் மலையும் யாண்டையன? என்று ஆராய்வோம். பாண்டிமண்டல சதகத்தில்,

"புரிசைப் புறத்தினிற் சேரனுஞ் சோழனும் போர்புரிய
விரியச் சயங்கொண்ட போழ்தினில் யாமினி யீங்கிவளைப்
பரிசுக்கு நல்ல கவிபாடி ஞல்வரும் பாக்யமென்றே
வரிசைத் தமிழ்புனை பாரியும் பாண்டியன் மண்டலமே"

என்று கூறப்பட்டிருத்தலால், பாரிபறம்புநாடு பாண்டிமண்டலத்தைச் சார்ந்ததென்பது அறியப்படும். மதுரையிலுள்ள பழையசிறைக்கூடத்து வடபுறச்சுவரிலுள்ள * கல்லெழுத்தில் பறம்புநாட்டைப்பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இது, மேற்கூற்றுக்கு ஆதாரமாய்ப், பாரிநாட்டுக்கும் பாண்டிமண்டலத்துக்குமுள்ள தொடர்பைக் குறிப்பிப்பதாகக் கருதலாம்.

இனி, பாரிக்குத் தந்தையோ பாட்டனோ ஆகிய வேள்-எவ்வி மிழலைக்கூற்றத்துக்குரியவனென்பது புறநானூற்றால் அறியப்படுகிறது. இம்மிழலைக்கூற்றம் தஞ்சாவூர் ஜில்லாவைச் சார்ந்த சில பகுதியும், மதுரை ஜில்லா சிவகங்கை ஜமீனைச் சார்ந்த சிலபகுதி

* இக்கற்கள், வேறோர் இடத்தினின்று பெயர்த்துக் கட்டப்பட்டவையாதலால், அதன் சாஸனங்கள் முன்முறையில்லாதுபிறழ்ந்து அங்கங்கே காணப்படுகின்றன.

யும்சேர்ந்தானது. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தே * திருப்பெருந்துறையைச் சார்ந்த பிரதேசம் இக்கூற்றத்தைச்சேர்ந்ததென்று கூறப்பட்டிருத்தலும் காண்க. எனவே, அவ்வெவ்வியின் வழித்தோன்றலாகிய வேள்பாரியுடைய பறம்புநாடும் அம்மிழலைக்கூற்றத்தின் ஒரு பகுதியாகவாவது அதன்பக்கத்ததாகவாவது இருத்தலே பொருத்தம். இவ்வாறு கொண்டு நோக்கும்போது, பாரியின்பறம்பு, நமக்கு வெள்ளிடைமலையாய் விளங்கித் திகழ்கின்றது. அஃதாவது இப்போது 'பிரான்மலை' என வழங்கும் கொடுங்குன்றமேயாகும். ஏனெனில், மேலே மிழலைக்கூற்றத்தைச் சேர்ந்தவையென்று குறிக்கப்பட்ட பகுதிகளுள்ளே, இப்பிரான்மலையே, சங்க நூல்களிற் சொல்லப்பட்டபடி வளமுந் தோற்றமும் வாய்ந்த ஒரே பெரு மலையாக விளங்குகிறது.

அன்றியும், இப்பிரான்மலையே பாரிமலையாக வேண்டுமென்பதற்கு மற்றொரு பிரபல காரணமுமுண்டு; இக்காரணத்தைக் கூறிவிட்டால், ஐயுறுதற்கிடமின்றி, விஷயம் முடிவுபெற்றதாகும். பாண்டிநாட்டுத் தேவாரம் பெற்ற தலங்களுள் கொடுங்குன்றம் என வழங்கும் இம்மலையிற் றிருக்கோயில்கொண்டுள்ள சிவபிரானுக்கு "பாரீசுவரமுடையார்" † என்றொரு திருநாமம் பழையசாசனமொன்றில் உள்ளதென்று தெரிகிறது. இதனால் அம்மலைக்கு "பாரீசுவரம்" என்ற பெயரும் முன்னாளில் வழங்கிவந்ததென்பது பெறப்படும். பாரீசுவரரது தலம் பாரீசுவரம்; பாரீசுவரர் என்பதற்கு பாரிக்கு அநுக்கிரகம் புரிந்த ஈசுவரர் என்பதே பொருளென்பது வெளிப்படை. ஆகவே, அம்மலையே பாரியுடைய பறம்பு என்பது தெள்ளிதாயிற்று. கொடுங்குன்றமென்று நூல்களில் மிகுதியாக வழங்கப்படும் இது, "பிரான்மலை" என்று இப்போது வழங்குவதைக் கருதும் போது,

* நரி குதிரையாக்கின திருவிளையாடல்; பாட்டு-௧௧. அரும்பதவுரை:— இப்புராணம் மஹாமஹோபாத்தியாயர்: ப்ரஹ்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்களால் நன்கு பரிசோதிக்கப்பட்டு, சென்றமாதத்தில் வெளியேறியது.

† இச்செய்தியை எனக்கு அன்புடன் அறிவித்தவர்—அரிய சாஸன விஷயங்கள் பல நம்பத்திரிகைக்கு எழுதிவருபவரும், என் நண்பருமான ஸ்ரீமாந்-து. அ. கோபிநாதராயரவர்கள், M. A. இவர்கள், கூடிய விரைவில் அச்சாஸனமுள்ள விடத்தையும்குறித்தனுப்புவதாகத்தெரிவித்திருக்கிறார்கள்.

அப்பெயர் "பாரிமலை" அல்லது "பறம்மலை" என்பதன் றிரிபாக வந்த தோ என ஐயம் ஒருதலையாக நிகழ்கின்றது. 'பிரான்மலை' யென நூல்வழக்கில்லாமையுமறிக. இம்மலை, கொடுங்குன்றமென்று பெயர் பெற்றதற்குக் காரணம், பெருவள்ளலாகியபாரியைமூவேந்தரும் அநியாயமாக வஞ்சித்துக்கொன்ற கொடுஞ்செயலுக்கு இடமானது பற்றிப்போலும்! பழையசங்கநூல்களிற் கூறப்பட்டவாறே, இம்மலை வளமும் பெருமையும் வாய்ந்திருத்தலோடு, சிதைவுற்ற பழைய அரணும் இனியநீர்ச்சுனைகளும் கொண்டு, வேளெவ்வியின் மிழலைக் கூற்றத்தைச் சார்ந்து, அப்பக்கத்துக்குரிய ஒரேபெரு மலையாக நின்று ஒளிர்வதாம். பிரான்மலைத் தொடர்ச்சியாகவுள்ள பிரதேசம் "துவராபதிநாடு" என இக்காலத்தும் வழங்குதல், பழையவேளிர் இப்பக்கத்தே ஆட்சிபுரிந்தவரென்பதைக் குறிப்பிக்கிறது. வேளிர், முன்னாளில், 'உவராவீகைத் துவரையாண்டு' அங்கு நின்றுவந்தவராதலால், அவர் தம் ஆதிக்குடியை அபிமானித்து வந்தேறியஇடத்துக்குப் பெயர் வழங்கல் இயல்பன்றோ? இவற்றால் பாரியது நாடும்மலையும் நன்கு விளங்கியவாறு காண்க. இது நிற்க,

இனி, ஔவையாரால் பெருஞ்சிறப்புடன் திருக்கோவலூர்த் தெய்வீகனுக்கு மணம் புரிந்து வைக்கப்பட்டவரென்று தமிழ்நாவலர் சரிதையிற் கண்ட அங்கவை சங்கவை என்னும் பெண்களிருவரும் வேள்பாரியின் மகளிரே யாதல் வேண்டுமெனவும், கபிலர் பாரிமகளிரைப் 'பார்ப்பார்ப்படுத்த'னர் எனவரும் புறநானூற்றுத்தொடர்க்குப் பார்ப்பாரது பாதுகாவலில் அவரை வைத்தனரென்பதே பொருளன்றி, அவரைப்பார்ப்பாருக்கு மணம் புரிவித்தனரென்பது பொருளாகாதெனவும் தம் நுட்பமதியால் ஊகித்து ஸ்ரீ: இராகவையங்காரவர்கள் "ஔவையார்" என்னும் வியாசத்தே பல சிறந்த காரணங்களுடன் எழுதியுள்ளமை பலர் அறிவர். அவரது ஊகத்தைப் பெரும்பாலும் வலியுறுத்தவல்ல ஆதாரம் சமீபத்தே அகப்பட்டது. இற்றைக்குத் தொள்ளாயிரம் வருஷங்கட்கு மூன்பு ஆட்சிபுரிந்த முதல் இராஜராஜசோழன் காலத்தே, திருக்கோவலூர் வீரட்டானேசுவரர் கோயில் கர்ப்பக்கிரகத்தில் பொறிக்கப்பட்டதும், அகவல்வடிவில் அமைந்ததுமான சாஸனமொன்று ஸ்ரீமாந்-து. அ.

கோபிநாதராயரவர்களால் (M. A.) வெளியிடப்பட்டுள்ளது. * அதனுட்கண்ட திருக்கோவலூரின் விசேடங்களுள்ளே, கபிலர் என்னும் புலவர் பெருமானைப்பற்றிக்காணப்படுவது அடியில் வருமாறு:—

"மொய்வைத் தியலு முத்தமிழ்க் கபிலன்
மூரிவண் டடக்கைப் பாரிதன் னடைக்கலப்
பெண்ணை மலையர்க் குதவிப் பெண்ணை
யலைபுன லழுவத் தந்தரிட் சஞ்செல
மினல்புகும் வீடுபே றெண்ணிக்
கனல்புகுங் † கபிலக் கல்லது."

எனக் காண்க. இதனுள், "கபிலர், தம்பால் அடைக்கலம்பெற்ற பாரிமகளை மலையமானுக்கு மணம்புரிவித்துப் பின் பெண்ணை நதிப் பக்கத்தே தவம்புரிந்து வீடுபெற்றனர்" என்னுங்கதை கூறப்படுகிறது. இதனால், பாரிமகளிர் பார்ப்பார்க்கு மணம்புரியப்பட்டனரல்லரென்பதும், திருக்கோவலூரையாண்ட மலையமானுக்கே அவர் மணம்புரிவிக்கப் பட்டனரென்பதும் தெளியப்படுகின்றன அல்லவா? ஆயின், ஐயங்காரவர்கள் கூறியவாறு ஔவையாரால் மணஞ்செய்விக்கப்பட்ட செய்தி இச்சாஸனத்துக் காணப்படவில்லை. ஒருகால், பாரிமகளிர் இருவருள்ளே, மூத்த அங்கவைமணம் ஔவையாராலும், இளையசங்கவை மணம் கபிலராலும் சிறிதுகாலமிடையிட்டு முடிக்கப்பெற்றிருத்தல் கூடுமென்று தோற்றுகிறது. பாரிமகளிர் மணத்தைப்பற்றி ஔவையார் சேரனுக்கு விடுத்த பாடலில் "பாரிமகள் அங்கவையைக் கொள்ள அரசன் மனமியைந்தான்" என அவ்விருவரையுங்கூறாது மூத்தவளையே சுட்டியிருத்தலும், மேலே குறித்த சாஸனப்பகுதியில் "பாரிதன் னடைக்கலப்பெண்ணை மலையர்க்குதவி" என அவ்வாறே ஒருத்திமணமே கூறியிருத்தலும், மேற்குறித்தவாறு, பாரிமகளிரிருவர்மணமும் ஒருவரால் முடிக்கப்பட்டதில்லை என்னும் ஊகத்துக்குத் தக்கசான்றாகின்றன. இச்சாஸனத்

* "செந்தமிழ்"த்தொகுதி-ச; பகுதி-ரு; பக்-உகூஉ.

† "கபிலக்கல்" என்பது, திருக்கோவலூரில் அக்கினிமூலைக்கண்ணேயுள்ளதும், பெண்ணையாற்றுத் துறைகளில் ஒன்றுமாகிய "கபிலத்துறை" என்று, திருக்கோவலூர்ப்புராணத்தாற் கருதப்படுகின்றது.

துக்கண்டவரலாறு, புறநானூற்றுட் குறித்தவைக்கும், ஐயங்காரவர்கள்ளுகத்துக்கும் பெரும்பாலும் ஒப்ப அமைந்திருத்தலேமுதன்முதற்கண்டபோது எமக்குண்டாகிய உவகை அளவுபட்டதன்று.

இங்ஙனம், பாரிமகளிரது மணநிகழ்ச்சி, பழமையான பாடல்களிலும், சாஸனத்தும் தெளிவாகக்கூறப்பட்டிருக்க, அப்பெண்கள் சிங்களதேசத்தரசனுய், வேற்றுவேந்தனல் தன்னுடு கவரப்பட்டுச் சேரனுடு புகுந்திருந்த பாரிசாலன் என்பான் மகளிரெனவும் பிறவும் சிலவேறுபாடுகள் பின்னூல்களிற் காணப்படுகின்றன. இதனை அடியில் வரும் அண்ணுமலைச் சதகச்செய்யுளாலுமுணர்க.

"சிங்கள மெனுந்தேய முழுதாளு மன்னன்
சிறந்தபேர் பாரிசாலன்
செய்மெய்த் தவத்தா லுதித்துநற் குணமேவு
சிறுமியங் கவைசஙகவை
மங்கையோ ரிருவரை வளர்த்தெடுத் தௌவையார்
மாமுகக் கணபதி கையான்
மணவோலை யெழுதிமும் மன்னரைக் கோவலூர்
வரவழைத் தறுகி டற்கே
தங்கிப் பனந் துண்ட மரமாகி யேபழந்
தாநதிப் பெண்ணை நெயபால்
தான்வரப் பாடியப் பெண்களைத் தெய்விகத்
தலைவன் மணம் புணரவே
யங்குதவு மௌவைதொழு மைங்கரன் றந்தையே
யருள்பெறு வசந்த ராயர்
அண்ணுவி னிற்றுதிசெய் யுண்ணு முலைக்குரிய
அண்ணு மலைத்தேவனே"

தென்னுட்டில் ஆட்சிபுரிந்த சிற்றரசனை இன்னுந்தெற்கேயுள்ள சிங்களநாட்டவனென்று வடக்கணுள்ளோர் கொண்டதும், பாரி என்னும்பெயரைப் பாரிசாலன் எனவழங்கியதும் அவ்வளவு வியப்புடையனவல்ல; உண்மைக்கதைகள் பிற்காலத்தில் மாறுபட்டுக்கிடப்பன இதுபோற்பலவுள. மேலே கூறிவந்தவற்றுல் வேள்பாரியின் வரலாறு ஒருவாறுஉணரத்தக்கது.

பத்திராசிரியர்.

*

ஸ்ரீ:

# ஸ்ரீ பட்டர் வைபவம்.

(௩௦௪-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

[ஸ்ரீ: வை. மு. சடகோபராமாநுஜாசாரியரவர்கள் எழுதியது.]

திருநெடுந்தாண்டகத்தில், "கல்லெடுத்துக்கன்மாரி காத்தாயென்றும்" * என்ற விடத்திற்குப் பலவகையாக விசேஷார்த்தம் விவரிக்கிறபோது 'கன்மாரியாகையாலே கல்லையெடுத்து ரக்ஷித்தான், நீர் மாரியாகில் கடலையெடுத்து ரக்ஷிக்குங்காணும்' என்று பட்டர் அருளிச்செய்தார்.

ஸ்ரீவால்மீகிராமாயணத்தில் யுத்தகாண்டத்திலே இராமபிரான் விபீஷணாழ்வானுக்கு அபயமளித்தவரலாற்றைக் கூறுகிற ஸர்க்கங்களின் சுலோகங்களுக்குப் பட்டர் அர்த்தம் உபந்யஸித்தபோது, கேட்டிருந்தவர்களில் ஒருவர் 'இந்த அபயப்ரதாநப்ரகரணத்தில் தேர்ந்த பொருளென்ன?' என்று வினவ, 'குற்றமுடையராயிருப்பார் அங்கீகரிக்கத்தக்கவரல்லர்' என்று சுக்ரீவரபிப்ராயத்தாலே பூர்வபக்ஷஞ்செய்து, 'குணதோஷங்கள் பாராட்டத்தக்கனவல்ல: பிராணிகள் நின்ற நிலையிலே சரணம் புகுதற்கு உரியர் என்று பெருமாள் திருவுள்ளத்தாலே சித்தாந்தஞ் செய்தவாறும்' என்று பட்டர் உரைத்தருளினர்.

பரமபதத்திலுமுட்பட எம்பெருமான் பக்தபராதீநனாயிருக்கிற நிலைமையை எடுத்துக்காட்டுமிடத்து, 'திருவனந்தாழ்வான் மடியிலும், ஸ்ரீசேனாதிபதியாழ்வான் பிரம்பின்கீழிலும், பெரிய திருவடி சிறகின் கீழிலுமாய்த்து, இத்தத்வம் வளருவது' என்று பட்டர் அருளிச்செய்வர்.

ஒரு சமயத்தில் நஞ்சீயர் பட்டரைநோக்கி 'பகவானுடைய திருநாமத்தைச் சொல்லும்போது ஆசார நியமமுடையவனைக்கொண்டு சொல்லவேண்டுமென்கிற நியதியுண்டோ?' என்று கேட்க, அதற்குப் பட்டர், 'கங்கையிலே முழுகப்போமவனுக்கு வேறொரு தீர்த்தத்திலே நீராடி அதன் பின்புபோகவேண்டுமென்பதுண்டோ?

* ௧௭-ஆஞ்செய்யுள்.

இல்லையே. அங்ஙனமே திருநாமஞ் சொல்லுகைக்கும் ஆதரமே வேண்டுவது; அதனையுடையவர்களே அதிகாரிகள்' என்று அருளிச்செய்தார்.

பட்டர் உபந்யாஸஞ்செய்கிறபோது விஷயங்களை நன்கு விளக்குதற்குத் திருஷ்டாந்தமாகச் சில சிறு கதைகள் சொல்லுவதுமுண்டு. அங்ஙனம், ஒருநாள், உலகத்தில் பேதையர் தங்கட்குச்சிறிதும் பொருந்தாத விஷயங்களைப் பிறர் தங்கள்மேலேறிட்டுச்சொல்லித் துதித்தாலும் அவை தமக்குத் தகுதியல்லனவென்றெண்ணி நாணங்கொள்ளாமல் அத்துதிமொழியை மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு மனமுவந்து அவ்வாறு துதித்தவர்க்கு மிகுதியாகப் பொருள் வழங்குவரென்பதற்கு எடுத்துக்காட்டாகச் சொன்னதொரு வரலாறு வருமாறு:—"தலையில் மயிரின்றியிருப்பானொருவன் நெற்களத்தில் தொழில்செய்துகொண்டிருந்தபோது, சதுரனான ஒருயாசகன் அங்கே வந்து அவனை நோக்கி 'நீர் குழலைப்பேணாதே தனியே நின்று தொழில் செய்கின்றீரே' என்று புகழ்ந்தான். அது கேட்டு உவந்து அவன் 'எதற்காக வந்தீர்?' என்று வந்தவனைவினவ, அவனும் 'கண்டுபோக வந்தேன்' என்ன, 'ஆனால், ஒரு நெற்கோட்டையைக் கொண்டுபோ.' என்று எடுத்துக்கொடுத்தனுப்பினான். அவன் அதனைக் கொண்டுபோம்போது எதிரே ஒருவன் வந்து 'இது எங்கே பெற்றது?' என்று வினவ, அவன் 'மொட்டைத்தலையன் தந்தான்' என்று சொன்னான். அதுகேட்ட வழிப்போக்கன் உடனே களத்துக்குவந்து நெற்பரிமாறுகின்றவனைநோக்கி, இன்னான் உம்மை வைதுபோகின்றனனே யென்று கோள்சொன்னான். அது கேட்டலும் அவன் 'அடா'! என்நெல்லையுங்கொண்டு என்னையும் வைதுபோவதே!' என்று சினந்து, நெற்கோட்டையைப் பறித்துக்கொள்ளக்கருதி, அவனைத் தொடர்ந்தோடினன். அவன் அவ்வாறு ஓடிவருவதைத் திரும்பிப்பார்த்த இரவலன், அவன் அருகில் வந்தவளவிலே 'என்தான்? குழல்களலைய அலைய ஓடிவாராநின்றதே!' என்று மீண்டும் புகழ்ந்தான். அது கேட்டலும், அந்த நெல்லுடையான், மிகவும் மகிழ்ச்சிகொண்டு 'ஒன்றுமில்லை: இன்னம் ஒரு நெற்கோட்டை கொண்டுபோகச்சொல்லவந்தேன்' என்றானாம்."

பட்டர், ஸ்ரீரங்கநாதனிடத்தில் மிக்கபக்தி யுள்ளவராதலால், அப்பெரிய பெருமாளைச் சிலகாலந் திருவாராதனஞ் செய்தமைபற்றி, இராமபிரானிடத்திற் பேரன்புடையராயிருப்பர். அங்ஙனம் அவர் திருமாலின் தசாவதாரங்களுள் இராமாவதாரத்தினிடத்திற் பக்ஷபாதத்தாற் சொல்லும் வார்த்தையைக் கேட்பதற்காகச் சிறியாத்தானென்பவர் ஒருநாள் பட்டரை நோக்கி, 'சக்கரவர்த்தித் திருமகனுக்கு எல்லா வேற்றங்களும் உண்டாயிருந்தாலும், பாண்டவர்களுக்காகத்தூதுபோன கிருஷ்ணனுக்கு உள்ள நீர்மை இல்லையே!' என்றார். அதற்குப் பட்டர், 'அங்ஙனமோ? முடியைத்தவிர்ந்து சடையைப்புனைந்து நாட்டைவிட்டுக் காட்டுகருச் சென்ற பெருமாள் தூதுபோகாரென்பதில்லை; அபிஷிக்தக்ஷத்திரியரான இக்ஷ்வாகு குலத்தவரைத் தூதுபோவென்னத்தக்க நாடுடைமன்னரெவரும் இல்லாத குறையே காண். இதனால், இராமபிரான் அடியவர்க் கெளியவனல்லனென்றாகாது' என்று அருளிச்செய்தார்.

ஒருசமய விசேஷத்தில் அடியார்களெல்லாருங்கூடிப் பட்டரைப் பிரஹ்மரதத்தில் எழுந்தருளப்பண்ணி ஊர்வலம் வரும்போது நஞ்சியர் தமக்கு உள்ள ஆசார்ய பக்திமிகுதியால் தாமும் அவரை ஸ்ரீபாதந்தாங்குவதாக எண்ணித்தோளிலே தண்டைவைக்கப்புக, அதுகண்டு பட்டர் 'நீர் உத்தமாச்சிரமத்தைக் கொண்டுள்ளதனால், உமது நிலைக்கு இது தகாது காணும்' என்று சொல்லி மறுக்கலானார். அது பற்றித் திடுக்கிட்ட நஞ்சியர் ஸ்வாமி சந்நிதியில் நிரந்தர கைங்கரியஞ் செய்தற்குத் தக்கதாமென்று நினைத்தன்றோ, அதற்குத் தடையாகிற சம்சாரத்தை முற்றத்துறந்து இந்தச்சந்யாஸாச்சிரமத்தைக் கைக்கொண்டேன்; இந்நிலைதானே ஸ்வாமிக்கு அடிமைசெய்யத்தடையாகுமானால், காஷாயதண்டங்களைக் கைவிட்டு முன்பு உடுத்த வெள்ளை வஸ்திரத்தையே உடுக்கக் கடவேன்' என்று விண்ணப்பஞ்செய்தார். அதுகேட்டுப் பட்டர் அவர்க்கு இருக்கிற ஆசாரியப் பிரதிபக்தியைக்குறித்து மிகவும் அதிசயித்தருளினர். இதனால், ஆசாரியகைங்கரியத்துக்கு அநுகூலமல்லாத வருணாச்சிரம தருமமும் விடத்தக்கதென்றபடியாம்.

சாஸ்திரங்களில் வல்லவனுயிருப்பானொரு பிராமணன் பட்டர் திருவோலக்கத்துக்கு அடிக்கடி வருவதுண்டு; அவனைக் காணும் போதெல்லாம் பட்டர் 'வந்தாயோ போனுயோ?' என்று ஸாமான்யமாகப்பேசுவர்; சாஸ்திரம் வல்லவரல்லாத ஒரு ஸ்ரீவைஷ்ணவர் பலகாலும் பட்டர் சந்நிதியிற் சேவிக்க எழுந்தருள்வர்; அவரைக் காணும்போதெல்லாம் பட்டர் மிகவுங் கிருபைபண்ணி 'எழுந்தருள்க எழுந்தருள்க' என்று கொண்டாடி ஆதரித்தருள்வர். இந்தத்தாரதம்மியத்தைப் பலதரங் கண்டிருந்த ஒருவர் பட்டரை நோக்கி 'ஸ்வாமி! தேவரீர், திருவோலக்கத்துக்குச் சாஸ்திரப்பிரவீணரான ஒரு பிராமணர் வரும்போது ஸாமாந்யமாகப் பேசியருள்கிறது; சாஸ்திரஞானமில்லாத வெறுஞ்சாதுவைஷ்ணவர் வரும்போது அவரை மிகவுங் கொண்டாடியருள்கிறது; இந்த வேறுபாட்டின் காரணத்தை அடியேனுக்கு அருளிச்செய்யவேண்டும்' என்று விண்ணப்பஞ்செய்தார். அதற்குப் பட்டர், 'எப்போதும்போல நாளைக்கும் அவர்களிரண்டுபேரும் வரக்கூடும்; அப்போது நீர்பார்த்திரும்' என்று சொல்லி, மறுநாள் சாஸ்திரஜ்ஞன் வந்தபோது அவனைநோக்கி 'நீர் ஆரைப் பரதத்வமென்று நினைத்திருக்கிறீர்?' என்று வினவியதற்கு, அவன் 'சிலபிரமாணங்கள், பிரமனைப் பரதத்வமென்று சொல்லுகின்றன; வேறு சில பிரமாணங்கள், விஷ்ணுவைப் பரமாத்மாவென்று பேசுகின்றன; மற்றுஞ்சில பிரமாணங்கள், ருத்திரனைப்பரம்பொருளென்று உரைக்கின்றன; ஆதலால், அவ்விஷயம் நயமால் நிச்சயிக்கத்தக்கதன்று' என்று சொன்னான். அவ்வளவோடு அவனைப் பட்டர் அனுப்பிவிட்டுப் பிறகு வந்த வைஷ்ணவசாதுவை நோக்கி 'தேவரீர் ஆரைப்பரதத்வ மென்றிருக்கிறீர்?' என்று வினவ, அவர் 'தேவரீர் நாராயணனே பரதத்வமென்று அருளிச் செய்யுமே; அது தவிர வேறொன்றறியேன்' என்ன, இனனமும் பட்டர் 'உமக்குத் தஞ்சமாக நினைத்திருப்பதேது?' என்ன, அவ்வைஷ்ணவர் 'எம்பெருமானுர் திருவடிகளே சரணம்' என்று தேவரீர் திருவாய்மலர்ந்தருளுமே; அதனையே தஞ்சமாக நினைத்திருக்கின்றேன்' என்ன, பட்டர் திருவுள்ளமுவந்து, முந்தினநாளில் ஐயமுற்று வினவியவனரப் பார்த்து 'இவ்விருவர்க்குமுள்ள ஏற்றத்தாழ்வைக் கண்டீரா? இவரோ அவனோ நன்கு மதிப்பிற்கு உரியவர்?' என்று அருளிச்செ

ய்ய, அதனால், அவர், பரதத்வநிர்ணயமில்லாத வெறுஞ்சாஸ்திர ஞானம் சிறவாது என்றும், சாஸ்திரஞானமில்லாதிருந்தாலும் குரூபதேசத்தாற் பரதத்வநிச்சய முண்டானால் அது சிறக்குமென்றும் அறிந்து கொண்டனர்.

பின்னர் ஒருசமயத்தில், பட்டர் சிஷ்யவர்க்கத்துடனே சேது யாத்திரையாக எழுந்தருளுகிறபொழுது ஒருநாள் பகல்முழுவதும் வழி நடந்த இளைப்பினால் இராத்திரி ஒரு மரத்தின் கீழே நஞ்சீயர் மடியில் திருமுடியை வைத்துப் பள்ளிகொண்டு கண்வளர்ந்தருள, அவ்விரவு முழுவதும் நஞ்சீயர் ஆசாரியருடைய நித்திரைக்குப் பங்கம் வரலாகாதென்று துடைமாற்றுதலும் அசைத்தலுஞ் செய்யாமலே இருந்திட்டனர். அதுகண்டு அனைவரும் 'ஆசாரியன் பக்கல் இங்ஙனம் அடிமை செய்யும்படியான சிஷ்யவ்ருத்தியை வேறு எங்கேனுங்கண்டதுண்டோ!' என்று ஆச்சரியப்பட்டார்கள்.

அங்ஙனம் பட்டர் திருவணையாடித் திரும்பி வருகிறபோது ஒருநாள் சாயங்காலமானவளவிலே, பாதிரி யென்கிற கிராமத்தில் ஒரு வேடனுடைய குடிசைக்கு எழுந்தருள, உடனே அவன் எழுந்து ஒருகட்டிலையமைத்து இவர்க்குக்கொடுக்க, பட்டர் அதன்மேலெழுந்தருளியிருந்து 'இவன் நமது மகிமையை யறிந்து இவ்வுதவிசெய்தானல்லன்; தான் ஒரு புகழ் பெறக்கருதி இது செய்தானுமல்லன்; நம்மால் ஒரு கைம்மாறு பெறலாமென்று செய்தானுமல்லன்; தனது இருப்பிடத்திற்கு நாம் வந்தோமென்ற அபிமானமன்றோ இவன் இவ்வளவு செய்யக் காரணமாகிறது? புத்தி சக்திகளில் மிகக்குறைபாடுடையனான ஒரு வேடனுக்கு உள்ள இயல்பு இதுவானால், அறிவாற்றல்களிற் சிறந்த சருவேசுவரன் தனது அபிமானத்திலொதுங்கினார்க்கு என்ன உதவிதான் செய்யமாட்டான்?' என்று ஈடுபட்டு அன்றையிரவு அங்கே தங்குபவராய் அவ்வேடனை யோகக்ஷேமம் விசாரித்தருள, அவன் சொல்வான்:—'ஸ்வாமி! நான் இன்றைக்குக்காட்டிலே வேட்டைக்குப் போனேன்; அங்கே ஒரு முயற் குட்டியைக் கண்டு அதனைப் பிடித்துவரலானேன்; அப்பொழுது அதன் தாய் என் முன்னே வந்து வழியிலே எதிரே குப்பிட்டுக்கொண்டு கிடந்தது. அதனைக்கண்டு எனக்கு இரக்கமுண்டாக, அதன் குட்டி

யை விட்டுவந்தேன்' என்று சொன்ன அவ்வேடன் வார்த்தையைக் கேட்டுப் பட்டர் வியப்புற்று மயிர்சிலிர்த்து நஞ்சீயரை நோக்கி 'கேட்டீரோ?' 'எல்லாவுபாயங்களையும் விட்டு என்னைச்சரணமடை; நான் உன்னை விடுவிக்கிறேன்' என்று கண்ணன் அருச்சுனனுக்கு உபதேசித்ததுபோல, எவ்வகைத்துன்பமும் தீர்தற்குச் சரணாகதியே சிறந்த உபாயமென்று அந்த முயலுக்கு உபதேசித்தவருண்டோ? 'யார் சரணமடைந்தாலும் அவரை எவ்வாற்றாலும் பாதுகாக்க வேண்டும்' என்று சுக்கிரீவன் முதலியோர்க்கு இராமபிரான் அறிவுறுத்தினாற்போலச் சரணாகத ரக்ஷணம் சிறந்த தருமமென்று இந்த வேடனுக்கு உபதேசித்தவர்தாம் யாரேனும் உண்டோ? யாதொருபதேசமுமில்லாதிருக்கத் தன்னடைவிலே சரணாகதியும் அதன் பயனும் பகுத்தறிவற்ற முயலினிடத்தும் வேடனிடத்தும் இப்படிக் கைகூடிற்றன்றோ? இவ்வேடனுக்கே இங்ஙனம் சரணாகதியிலே இரக்கம் பிறந்தது கண்டபடியால், பரம சேதநனான எம்பெருமானுக்குச் சரணாகதரிடத்திலே இரக்கமுண்டாவதற்கு ஒருசாஸ்திரம் தேடவேண்டுவதில்லையே' என்று ஈடுபட்டு அருளிச்செய்து, பொழுது விடிந்ததும் புறப்பட்டு ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளி முன்போலவே ஆழ்வார்களருளிச்செயல்களின் பொருளை வியாக்கியானித்துக் கொண்டிருந்தார்.

அக்காலத்திலே திருவரங்கம் பெரியகோயிலின் ஸப்தப்பிராகாரங்களுள் ஆறாவது பிராகாரமான திரிவிக்கிரமன் திருவீதித்திருமதிள் மிகவும் ஜீர்ணமாய்ச்சரிந்துவிழ, அதனைச்சீர்படுத்திக் கட்டுவிக்கத் தொடங்கிய வீரசுந்தரப்பிரஹ்மராயன் அந்த மதிலின் நேர்மைக்கு மாறாகப்பிள்ளைப் பிள்ளையாழ்வானுடைய திருமாளிகை குறுக்கிட்டிருப்பது கண்டு முன்போல மதிலை ஒதுக்கிக்கட்டாமல் அவர் திருமாளிகையை இடித்து நேரொழுங்காகத் திருமதிள் கட்டுவிக்க முயன்றான். அதனையறிந்த பட்டர், அந்த ராஜனை நோக்கி 'நீ கட்டுவிக்கிற திருமதிளோ பெருமாளுக்கு ரக்ஷகம்; மகாபாகவதரான பிள்ளைப்பிள்ளையாழ்வான் மகாநுபாவராதலால் அவருடைய வாழ்த்தன்றோ நம்பெருமாளுக்குப் பாதுகாப்பு? முன்பு திருமங்கையாழ்வார் நான்காவது பிராகாரம் கட்டுவிக்கிறபோது தொண்டரடிப்பொ

டியாழ்வார் திருமாலை சேர்க்கிற இடமாகிய அடந்தை நடந்தையென்னும் பூஞ்சோலைகள் நேர்பட, அவற்றையழித்துக் குறுக்கி மதில் கட்ட மனங்கொள்ளாமல் ஒதுக்கி மதில் கட்டவில்லையா? அதுபோலவே இப்பொழுதும் பிள்ளைப்பிள்ளையாழ்வான் திருமாளிகையைவிட்டு ஒதுங்கத்திருமதிள் கட்டுவிப்பதே தகுதி' என்று நல்லறிவுகூறினர். அதுகூறவுங் கேளாமல் வீரசுந்தரன், ஆசாரிய புத்திரரென்ற அச்சமின்றிப் பட்டர் வார்த்தையை உபேக்ஷித்து, ஆழ்வானுக்கு அந்தரங்கசிஷ்யரென்ற பெருமையையும் பாராது பிள்ளைப்பிள்ளையாழ்வான் திருமாளிகையை இடித்துத் தள்ளி நேர்படத் திருமதில் கட்டுவித்தான். இது காரணமாகப் பட்டர்க்கும் அவ்வரசனுக்கும் உண்டான மநஸ்தாபம் நாளடைவிலே மேலிட, வீரசுந்தரன் பட்டரை ஸ்ரீரங்கத்திலிருக்க வொட்டாது மிகவும் உபத்திரவிக்க, பட்டர் யாரோடுஞ் சொல்லாது கோயிலினின்று புறப்பட்டுத் திருக்கோட்டியூர்க்கு எழுந்தருளலானார். அங்ஙனம் எழுந்தருளும்போது பட்டர் வழியிலே பசிதாகங்களால் இளைப்புற்று நஞ்சீயரை நினைத்தார். நிழல்போல நீங்காது வழிபாடுசெய்பவரான நஞ்சீயரோ, அங்ஙனம் பட்டர் கோயிலைவிட்டுப்புறப்பட்ட செய்தியை யுணர்ந்து கட்டமுதும் நன்னீரும் எடுத்துக்கொண்டு அவரைத்தேடிச்சென்று அவரெழுந்தருளிய வழியை யறிந்து பின் தொடர்ந்துகொண்டிருந்தனராதலால், அவ்வாசிரியர் தம்மை நினைத்தஅவ்வளவிலே 'அடியேன்' என்று சொல்லி அணுகி அவரை அமுது செய்யப் பண்ணிவைத்து இளைப்பாற்ற, பட்டர், அப்பொழுது, குருசுச்ரூஷணத்தில் நஞ்சீயர்க்கு உள்ள ஜாக்கிரதையைக் குறித்துத் திருவுள்ளமுகந்து அவர்க்கு விசேஷ கடாக்ஷஞ் செய்தருளினார். இப்படி சமயந்தவறாது வழிபாடுசெய்து ஆசாரியாநுக்கிரகத்துக்கும் பூர்ணபாத்திர மாயினார் நஞ்சீயர்.

(இன்னும் வரும்)

சிவமயம்.

# இராமாவதாரச்செய்யுட்பாடாந்தரம்.

(கூ-ஆம் பகுதி. சகூ௩-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

## சடாயுவுயிர்நீத்தபடலம்.

பாரெனக் கனலெனப் புனலெனப்பகர்
பேரெனத் திசையென முனியிற் பேருமாற்
சாரெனச் சரியவக் கமலக் கண்ணனை
யாரெனக் கருதியிவ் விடரி னாழ்கின்றீர்.

என்னும் எ-ம் செய்யுளில், 'பாரெனக் கனலெனப் புனலென ப்பகர்-பேரெனத் திசையென முனியிற் பேருமால்' என்பது, 'பாரெனப் புனலெனப் பவனம்வான்கனற் — பேரனைத்தவையவன்மு னியிற் பேருமால்' எனக் காணப்படுகின்றது. 'பகர்பேரென' என்பதற்கு (மற்றும்) சொல்லப்படுகின்ற பெயர்கள் என்று பொருள் கூறி, ஏனைய பூதங்களைக்கொள்வது சிறப்பின்மையிற் பின்னையதே பொருத்த முடைத்து. பார்முதலியவற்றினின்றும் பகர்பேரென என்பதைத்தனியே பிரித்துப் பொருள் கூறலும் பொருத்தமின்மை காண்க.

௯

மாற்றமென் பகர்வது மண்ணும் வானமும்
போற்றவன் றிரிபுர மெரித்த புங்கவ
னேற்றிநின் றெய்தவில் லிற்ற தெம்பிரா
னாற்றலி னமைவதோ ராற்ற லுண்மையோ.

என்னும் கூ-ம் செய்யுளில், 'ஏற்றிநின் றெய்தவி லிற்ற தெம்பிரா —னாற்றலி னமைவதோ ராற்றலுண்மையோ'' என்பது 'ஏற்றி நின்றெய்தவிலிருந்த வெம்பிரா—னாற்றலின் மேலுமோராற்றலுண் மையோ' எனக்காணப்படுகின்றது. எம்பிரானாற்றலின் முறிபட் டது ஆதலால் அவராற்றல்போற் பொருந்துமாற்றலுள்ளதோ என வலிந்துபொருள்கோடலினும் இதுவே சிறப்பும் பொருத்தமு முடைத்து.

௬௨

போவது புரிவல்யான் புகுந்த துண்டெனிற்
காவல்செ யெருவையின் றலைவன் கண்ணுறு
மாவது காக்குமென் றறிவித் தவ்வழி
தேவர்செய் தவத்தினாற் செம்மலேகினான்.

என்னும் ௧௬-ம் செய்யுளில், 'ஆவது காக்குமென்றறிவித்தவ் வழி' என்பது 'ஆவதுகாக்குமென்றறிவுற்றவ்வழி' எனக்காணப்படுகின்றது. சீதையிடத்து விடைபெற்றுச் சென்றவன்பின் அறிவித்தல் கூடாதாகலின் 'அறிவுற்று' என்றலே பொருத்தம். தன் மனத்தில் இவளை யார் காக்கப்போகின்றார் என்று வருந்திச் சென்றவற்கு இடையே சடாயுவின் நினைப்பு வருதலின் 'எருவையின்றலைவன் கண்ணுறு—மாவது காக்குமென்று' சிந்தித்தான் என்பார் இங்ஙனம் கூறினார். அறிவுற்று-சிந்தித்து.

நிற்பவர் கடைத்தலை நிறைந்து தேவரே
சொற்பகு மற்றவன் பெருமை சொல்லுங்காற்
கற்பக முதலிய நிதியங் கையன
பொற்பக மானநீ ரிலங்கைப் பொன்னகர்.

என்னும் ௬௩-ம் செய்யுளில், 'கற்பக முதலிய நிதியங் கையன—பொற்பகமான நீரிலங்கைப் பொன்னகர்' என்பது 'கற்பக முதலிய நிதியங் காமர்சூழ்—பொற்பக மானந்தே ரிலங்கை பொன்னகர்' எனக்காணப்படுகின்றது. கற்பகமுதலியனவே நிதியமாயும், புட்பகவிமானமே தேராயும் இலங்கையே சுவர்க்கம்போன்ற சிறப்புடையதாயும் இருக்கின்றது என்பது சிறப்புடைப் பொருளாயிருத்தலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. 'நிற்பவர் கடைத்தலை நிறைந்து தேவரே' என்பதற்கும் இப்பாடமே சிறந்த இயைபுடையதாயிருத்தல் காண்க.

௬௪

யானையும் யாளியு முதல யாவையுங்
கானொடு மரத்தொடு தூறு கல்லிவை
மேனிறைந் திருசிறை வீச்சி னேறலால்
வானமுங் கானமு மாறு கொண்டவே.

என்னும ௬௦-ம் செய்யுளில், 'வானமுங் கானமு மாறு கொண்டவே' என்பது 'வானமுங் கானக மென்ன லாயவே' எனக்காணப்படுகின்றது. 'மாறுகொண்டவே' என்பதிற் பொருட் சிறப்பின்மையானும், யானை முதலியவெல்லாம் இருசிறைவீச்சினேறலால் ஆகாயமும் காடாயினதென்னுமிடத்துப் பொருள்சிறத்தலானும் பின்னையதே பொருத்தமுடைத்து.

௯ஷ

வந்தன னெருவையின் மன்னன் மாண்பிலா
னெந்திரத் தேர்செல வொழிக்கு மெண்ணினான்
சிந்துரக் கால்சிரஞ் செக்கர் சூடிய
கந்தரக் கைலையை நிகர்க்குங் காட்சியான்.

என்னும் ௬௨-ம் செய்யுளில், 'எந்திரத்தேர் செலவொழிக்குமெண்ணினான்—சிந்துரக்கால் சிரஞ்செக்கர் சூடிய—கந்தரக் கைலையை நிகர்க்குங் காட்சியான்' என்பது 'எந்திரத் தேர்செலா தொழிக்கு மீட்டினாற்—சிந்தொடு மதிச்சடைச் செக்கர் சூழ்களக்—கந்தரன் கைலையை நிகர்க்குங் காட்சியான்' எனக் காணப்படுகின்றது. சடாயுவின் காட்சி முன்சொல்லப்பட்டொழிந்தனவாதலானும், செலவைத் தடுத்தலாற் கைலையை யொத்தான் என்பதனகட் பொருள்சிறத்தலானும் பின்னையதே பொருத்தமுடைத்து.

௯ஷ

கண்டு கண்டக ரோடமக் காரிகை பொருட்டா
லண்ட ராதியர்க் காரமர் விளைந்ததென் றயிர்த்தார்
துண்ட வாளினிற் சுடர்க்கொடி துணிந்ததென் றுணராப்
புண்டரீகக்கண் புனல்வரப் புரவலன் புகல்வான்.

என்னும் ௧௩௬-ம் செய்யுளில், 'புண்டரீகக் கண் புனல்வரப புரவலன் புகல்வான' என்பது, 'புண்டரீகக்கணமலனுக் கிளையவன்புகல்வான்' எனக் காணப்படுகின்றது. புண்டரீகக் கண் இராமனுக்கே விசேடமாக உரிமை யுடைமையின் பின்னையதே சிறப்புடைத்து.

---

## அயோமுகிப்படலம்.

அழுந்திய சிந்தை யரக்கி யலக்க
ணெழுந்துயர் காதலின் வந்தெதிர் நின்றாள்

புழுங்குமென் னேவொடு புல்லுவ னன்றி
விழுக்குவ னேவென விம்ம லுழன்றாள்.

என்னும் சக-ம் செய்யுளில், 'புழுங்குமென்னேவொடு புல்லுவனன்றி' என்பது 'புழுங்கிய மெய்யொடு புல்லுவனன்றி' எனக்காணப் படுகின்றது. புழுங்குதலாகிய அடை மெய்க்கியைபுடைமையானும், புல்லுவதற்கும் மெய் இயைபுடைமையானும் பின்னையதே சிறப்புடைத்து.

(இன்னும் வரும்.)

## மாரீசன் வதைப்படலம்.

| பிழை. | திருத்தம். |
| --- | --- |
| (கக-ம் செய்யுள்) நெடுந்திசைப்பெருந் தண்டேந்திய, | நெடுந்திசைபெருந் தண்டேந்திய. |
| (கரு ரு-ம் செய்யுள்) என்றான், | என்றார். |

சி. கணேசையர்.

---

உ

# மஹாபாரதம்.

(ருருஎ-ஆம் பக்கத்தொடர்ச்சி)

முன்னர்க்கூறிமுடிக்கப்பட்டுளதாயினும் குந்தி என்னும்விஷய சம்பந்தமாக இன்னுஞ்சிலகூறுதும். சூரன் மகளாகிய குந்தி என்பவள் போசனுக்குத் தத்தபுத்திரியாயினள் என்பது இங்கே பூரணமாகச் சொல்லப்படவில்லை. அதனை மச்சபுராணம் பூரணமாகக் கூறும்.

மச்சபுராணம்.

முன்னுரைத் திட்ட சூரன் மொய்குழற் பிருதை தன்னைத்
தென்னுறு குந்தி போசன் றனக்குத்தெத் தெனவ ளித்தான்
அன்னநற் பிருதைக் கும்பேர் குந்தியென் றறைவ ரந்தப்
பன்னருங் குந்தி தன்னை வசுதேவன் பாண்டுக் கீந்தான்.

(கண்ணனவ. உ௦.)

குந்தியின் தந்தையர் இருவர்க்கும் குலமொன்றன்று. பெற்ற பிதாவாகிய சூரன்குலமும் வேறே! வளர்த்த பிதாவாகிய குந்திபோசன் குலமும் வேறே! சூரன் யதுகுலத்திற் பிறந்தவன். குந்திபோசன் போசன்குலத்திற் பிறந்தவன். அதுபற்றியே குந்திபோசன் எனப்பட்டான். யதுகுலத்தோர் யாதவர் எனவும், போசன்குலத்தோர் போசர் எனவும் வழங்கப்படுகின்றனர்.

ஆதவன்வந்துதிப்பதன்முன் மற்றைநாளிலணிநகர்வாழ்சனமனைத்துமந் தக்குன்றின், மாதவனதேவவிஞன்மழைக்காலத்துவாசவற்குவிழாவயர்வான் வந்தகாலே, யாதவரிற்போசரின்மற்றுள்ளவேந்தர்யாவருஞ்சூழ்வாநறுந்தாரி ராமன்வந்தான், சூதடர்பச்சிளங்கொங்கைப்பச்சைமேனிச் சுபத்திரையுந் தோழியர்கள்சூழவந்தாள்.

இருகுலமும் வேறே என்பதனை இங்குள்ள "யாதவரிற்போசரில்" என்பதும் இனிது விளக்கும். யாதவர் - யதுகுலத்தோர். போசர் - போசர்குலத்தோர். போசன் - சாத்துவதன்மகன். குந்தியின் புத்திரர் பார்த்தர் எனப்படுதலன்றிக் கௌந்தேயர் எனவும்படுவர். கௌந்தேயர் - குந்திபுத்திரர். கௌந்தேயருள்ளே வீமன் மாருதி எனவும், ஆநிலன் எனவும் பெயர் பெறுவன். மாருதி - மருத்தின் மைந்தன். ஆநிலன்-அநிலன் மைந்தன். (பதினெட். ௬௨௫) அருச்சுனன் பாகசாசநி எனவும், வாசவி எனவும் பெயர் பெறுவன். பாகசாசநி - பாகசாசநன்மகன். வாசவி-வாசவன்மகன். இனி அப்பாற் செல்லுதும்.

மத்திரி - மத்திரதேசராசன்மகள்; தத்திதங்கெட்டு நின்றது. மாத்திரி எனவும் படுவள். இவள் பாண்டு மகாராஜாவுக்கு இரண்டாம் மனைவி; சல்லியனுக்குத் தங்கை. இவளுக்கு நகுலன், சகாதேவன் என்னும் இருவரும் புத்திரர். இவர் ஆச்சுவிநேயர் எனவும் பெயர் பெறுவர். ஆச்சுவிநேயர்-அச்சுவினிதேவருடைய புத்திரர். இந்த இருவரும் தருமன் முதலிய மூவருமாகிய ஐவரும் பாண்டவர் எனவும் படுவர். பாண்டவர் - பாண்டுமகாராசாவின் புத்திரர். இந்த ஐவர்க்கும் திரௌபதி ஒருத்தியே மனைவி.

திரௌபதி - துருபதேசராசன்மகள். இவள் பாஞ்சாலி என்றும், யாஞ்ஞசேநி என்றும், பார்ஷதி யென்றும் சொல்லப்படும் வேறு

தத்திதாந்த நாமங்களையும் பெறுவள். பாஞ்சாலி - பஞ்சாலதேசராசன் மகள். யாஞ்ஞசேநி - யாஞ்ஞசேநன்மகள். பார்ஷதி-பார்ஷதன் மகள். இவற்றின் பிராதிபதிகங்களெல்லாம் துருபதராசனையே உணர்த்திநின்றன. இப்பெயர்களன்றிக் கிருஷ்ணை, வேதிசை, நித்திய யௌவனை முதலிய வேறு நாமங்களும் இவளுக்குண்டு. இவளுக்குப் புத்திரரும் ஐவர்.

வேதஞ் சிறக்க மநுநீதி விளங்க விப்பார்
ஆதங்க மாற வைவரி னைவர் மைந்தர்
பூதங்க ளைந்திற் குணமைந்தும் பொலிந்த வாபோல்
ஓதங் கியிலுற் பவித்தாள் வயினுற் பவித்தார். (தீர்த்தயா. அஎ.)

இப்புத்திரர் ஐவரும் உபபாண்டவர் எனவும், திரௌபதேயர் எனவும், திரௌபதர் எனவும் வழங்கப்படுவர். திரௌபதேயர்- திரௌபதியின் புத்திரர். "பஞ்சத்திரௌபதேயரும் துயில்பொழுதில்" (பதினெட்டு-உகஅ) திரௌபதர் - திரௌபதியின் புத்திரர். "திரௌபதரைவரும் (படையெழுச்சிச்சரு—௫) இவருள்ளே தருமனுக்குப் பிறந்தோன் பெயர் பிரதிவிந்தியன். வீமனுக்குப் பிறந்தோன் பெயர் சுருதசோமன். அருச்சுனனுக்குப் பிறந்தோன் பெயர் சுருதகர்மன். நகுலனுக்குப் பிறந்தோன் பெயர் சதாநீகன். சகாதேவனுக்குப் பிறந்தோன் பெயர் சுருதசேனன். அருச்சுனன்மகன் ஆர்ச்சுனி எனவும் படுவன். நகுலன் மகன் நாகுலி எனவும் படுவன். ஆர்ச்சுனி என்பது அபிமந்யுவையும் உணர்த்தும். அபிமந்யு அருச்சுனனுக்குச் சுபத்திரையிடம் பிறந்தவன். அபிமந்யு சௌபத்திரேயன் எனவும் படுவன். சௌபத்திரேயன-சுபத்திரையின் மகன். இனித் திருதராட்டிர சம்பந்தமாகிவருந் தத்திதங்களிற் செல்லுதும.

திருதராட்டிரனுக்கு அம்பிகேயன் என்னும் பெயரும் உண்டு. "அம்பிகேயனமைச்சரொடெண்ணினன்" (திரௌபதி. ௧௦எ) அம்பிகேயன்-அம்பிகையின்மகன். அம்பிகை-காசிராசன்புத்திரிகளுளொருத்தி. திருதராட்டிரன் மனைவிபெயர் காந்தாரி. காந்தாரி காந்தாரதேசராசன்மகள். இக்காந்தாரதேசராசனுக்குச் சுபலன் என்றும் பெயருண்டு. காந்தாரி சௌபலை எனவும் படுவள். சௌபலை-சுபலன்மகள். காந்தாரியுடைய சகோதரன் பெயர் சகுனி. இவன் சௌபலன் எனவும்

படுவன். "கன்னசௌபலர்" (வாரணா. ரு) சௌபலன் - சுபலன் மகன். காந்தாரிக்குப் புத்திரர் நூற்றுவர். நூற்றுவரும் தார்த்தராட்டிரர் என்றும், காந்தாரேயர் என்றும், சௌபலேயர் என்றும் பெயர் பெறுவர். தார்த்தராட்டிரர்-திருதராட்டிரன் புத்திரர். "தாண்டு. வெஃபரித்தேர்த்தார்த்தராட்டிரர்'' (திரௌபதி. ௬௮) காந்தாரேயர் - காந்தாரியின்புத்திரர். சௌபலேயர் - சௌபலையின் புத்திரர். புத்திரியும் ஒருத்தி. அவள் பெயர் துச்சலை. இவர் நூற்றுவரும் வியாசமுநிவருடைய வரத்தினாற் பிறந்தவர்கள். ஒருநாள் பசியினால் வருந்தித்தன்பால் வந்த வியாசமுநிவரைக் காந்தாரி (உணவாதிகளால்) மகிழ்வித்து நூறு புதல்வர்களைப் பெறுதற்கு வரம் பெற்றாள் என்றும், திருதராட்டிரனாலே கருப்பந்தரித்தாள் என்றும் முதனூல் கூறும்.

சுலோகம்.

𑌕𑍍𑌷𑍁𑌚𑍍𑌛𑍍𑌰𑌮𑌾𑌭𑌿𑌪𑌰𑍀𑌤𑌾𑌙𑍍𑌗𑌂 𑌦𑍍𑌵𑌈𑌪𑌾𑌯𑌨𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ।
𑌤𑍋𑌷𑌯𑌾𑌮𑌾𑌸𑌗𑌾𑌨𑍍𑌧𑌾𑌰𑍀 𑌵𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌈 𑌵𑌰𑌂𑌦𑌦𑍌 ॥
𑌸𑌾𑌵𑌵𑍍𑌰𑍇𑌸𑌦𑍃𑌶𑌂𑌭𑌰𑍍𑌤𑍁𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂𑌶𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌤𑌤𑌃𑌕𑌾𑌲𑍇𑌨𑌸𑌾𑌗𑌰𑍍𑌭𑌂 𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌦𑌥𑌾𑌗𑍍𑌰𑌹𑍀𑌤𑍍 ॥(அத்-௧௧௦)

இப்பொருளை அடக்கி இப்பாரதத்திலே வருங்கவியையும் இங்கே கூறுதும்.

பூந்தார்வியாதமுனிதாளிணைபோற்றியன்பு
கூர்ந்தார்வமுற்றியவன்பால்வரங்கோடலெய்திக்
காந்தாரிநூறுமகவானகருப்பமொன்று
வேந்தாதரிக்கத்தரித்தாள்வடமீனெடொப்பாள்.

(சம்பவச்சரு. ௩௮.)

ஆர்வமுற்றி என்பது வேட்கையை முற்றுவித்து எனப்பொருள் படும். முற்றி என்பது அந்தர்ப்பாவிதணிச்சு. ஆர்வமென்றது பசிகாரணமாக வியாசருக்குண்டாய வேட்கையை. முற்றுவித்து என்பதனால் அந்நபாநாதிகளைப் பூரணமாகக் கொடுத்தாள் என்பது பெறப்படும். முதனூலாரும இதனைத் "𑌤𑍋𑌷𑌯𑌾𑌮𑌾𑌸" என்பதனால் விளக்கினர். 𑌤𑍋𑌷𑌯𑌾𑌮𑌾𑌸 - மகிழ்வித்தாள். வரங்கோடல்- விரும்பியதனைப்பெறுதல், இங்கே, காந்தாரி விரும்பியது நூறுபுத்

திரர் வேண்டும் என்பது. அதற்கு ஆர்வமுற்றலும் பிறவும் காரண மாதல் காட்டிநிற்றலால் "பூந்தார்வியாதமுனிதாளிணை போற்றியன் பு-கூர்ந்தார்வமுற்றியவன்பால்வரங்கோடலெய்தி" என்பது அபேத கேதுகம் என்னும் அணியாகும். ஆதரித்தல் - புணர்தல்; ஆகுபெ யர். "வடமீனொடொப்பாள்" என்பது உவமையணி. இது, தன க்கு நியமனஞ்செய்த நாயகன் குருடன் எனக்கேட்டுழியும் பிறழ் வில்லாதபெருநிறையுடையாள் என்பது கொண்டு கூறினர் என்ப தையும் புலப்படுத்தும். அது கூறுங்கவினையும் கூறாதுர்.

நதியளித்தவனேவலிற்றூதர்போய்நயந்துடன்காந்தார
பதியளித்தமெய்க்கன்னியைத்தருகபூபதிக்கெனமணநேர்ந்தார்
மதியளித்ததொல்குலத்தவன்விழியிலாமகனெனத்தமர்சொல்ல
விதியளித்ததென்றுளமகிழ்ந்தனள்வடமீனெனத்தகுங்கற்பாள்.

(சம்பவச்சரு. உங.)

இங்கே "மணநேர்ந்தார்" என்பதற்குத் தந்தைதாயராகிய இரு முது குரவரும் என ஒருவிளைமுதல் வருவித்துரைக்க. நேர்ந்தார் அவரென்றே முதனூல் கூறும். இந்த நூற்றுவருடைய நாமங்களு ள்ளே சிலநாமங்கள் தமிழ் மொழியிலே வேற்றுருவோடும் வழங்க ப்படுகின்றன: ஆதலின் அவைகளையும் கூறுதும்.

## தார்த்தராட்டிரர்நாமங்கள்.

க. துரியோதனன்.
உ. யுயுத்சு.
ந. துச்சாதனன்.
ச. துச்சகன்.
ரு. துச்சலன்.
சு. துர்முகன்.
எ. விவிஞ்சதி.
அ. விகர்ணன்.
கூ. சலசந்தன்.
ய. சுலோசனன்.
கக. விந்தன்.
கஉ. அநுவிந்தன்.
கந. துர்த்தருடன்.
கச. சுவாகு.
கரு. துர்ப்பிரதருடணன்.
கசு. துர்மருடணன்.
கஎ. துருமுகன்.
கஅ. துர்க்கருணன்.
ககூ. கர்ணன்.
உ0. சித்திரன்.
உக. உபசித்திரன்.
உஉ. சித்திராக்கன்.
உந. சாரு.
உச. சித்திராங்கன்.
உரு. துர்மதன்.
உசு. துர்ப்பிரகர்ஷன்.
உஎ. விவித்சு.
உஅ. விகடன்.

௪௯. சமன்.
௫0. ஊர்ணநாபன்.
௫௧. பத்மநாபன்.
௫௨. நந்தன்.
௫௩. உபநந்தன்.
௫௪. சேனுபதி.
௫௫. சுடேணன்.
௫௬. கண்டோதரன்.
௫எ. மகோதரன்.
௫அ. சித்திரவாகு.
௫௯. சித்திரவர்மா.
௬0. சுவர்மா.
௬௧. துருவிரோசனன்.
௬௨. அயோவாகு.
௬௩. மஹாவாகு.
௬௪. சித்திரசாபன்.
௬௫. சுகுண்டலன்.
௬௬. வீமவேகன்.
௬எ. வீமபெலன்.
௬அ. பலாகன்.
௬௯. வீமவிக்கிரமன்.
௭0. உக்கிராயுதன்.
௭௧. வீமசரன்.
௭௨. கநகாயு.
௭௩. திருடாயுதன்.
௭௪. திருடவர்மா.
௭௫. திருடகத்திரன்.
௭௬. சோமகீர்த்தி.
௭எ. அநூதரன்.
௭அ. சராசந்தன்.
௭௯. திருடசந்தன்.
௮0. சத்தியசந்தன்.
௮௧. சகச்சிரவாகு.
௮௨. உக்கிரச்சிரவா.
௮௩. உக்கிரசேநன்.
௮௪. சேநாநி.
௮௫. கமமூர்த்தி.
௮௬. அபராசிதன்.
௮எ. பண்டிதகன்.
௮அ. விசாலாக்கன்.
௮௯. துராதரன்.
எ0. திருடகத்தன்.
எ௧. சுகத்தன்.
எ௨. வாதவேகன்.
எ௩. சுவர்ச்சசன்.
எ௪. ஆதித்தியகேது.
எ௫. வெகுவாதி.
எ௬. நாகதத்தன்.
எஎ. அநுயாயி.
எஅ. நிஷங்கி.
எ௯. கவசி.
அ0. தண்டி.
அ௧. தண்டதரன்.
அ௨. தனுக்கிரகன்.
அ௩. உக்கிரன்.
அ௪. பீமரதன்.
அ௫. வீரன்.
அ௬. வீரவாகு.
அஎ. அலோலுபன்.
அஅ. அபயன்.
அ௯. இரெளத்திரகன்மன்.
௯0. திருடரதன்.
௯௧. அநாதிருடியன்.
௯௨. குண்டபேதன்.
௯௩. விராவி.
௯௪. தீர்க்கலோசனன்.
௯௫. தீர்க்கவாகு.
௯௬. மகாவாகு.
௯எ. வியுடோரு.
௯அ. கநகாங்கதன்.
௯௯. குண்டசித்து.
௧00. சித்திரகன்.

இந்த நூற்றுவர் நாமங்களும் இப்பாரதத்திலே வரிசையாகக்கூறப்படவில்லை. போர்நிகழ்ச்சி கூறுஞ் சருக்கங்களிலே இவருள்ளே பலர் நாமங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளுள்ளே சில இவற்ருேடு மாறுபடுகின்றன. காலக்கிரமத்திலே வேருயினபோலும். அவற்றுள்ளும் சிலவற்றை ஈண்டுக்கூறுதும்.

*

சேனுவிந்தசுதக்கணன்பொற்றேர்ப்பிங்கலசன்சலாசந்த
னனுவீமவாகுவெனுமடல்வாணிருபரைவரையும்
வானுடாளும்படிவிடுத்தான்வன்பாற்றம்மைமையவரையுங்
கானுள்சென்றசாவலனைப்போல்வான்வீரக்கழல்வீமன்.
(நான்காம்போர்-உஅ.)

மூந்தவன்றுசென்றுசுகன்மைந்தனுசுகமூழ்கவே
சுந்தரன்விசாலக்கணன்வீரவாசிபொரா துண்டனு
மந்தமாமகோதரனுடன்மாகவிந்துவுமபயனுஞ்
சிந்தினர்களந்தன்னிலாதித்தகேதுவுஞ்சேரவே.
(எட்டாம்போர்-சு.)

அறமிக்கசொற்குண்டலபோசனனுதியக்கன்
றிறமிக்கதீர்க்கநயனன்சிலைத்திம்மவாகு
மறமிக்கவேற்குண்டலன்குண்டலதாரன்மன்னூற்
றுறைமிக்கசேள்விக்கனகத்துவசனனதோன்றல்.
(எட்டாம்போர்-௧௦.)

இந்த நாமங்களுள்ளே சில சில நாமாவலிகளுள் சிறிதும் வரவில்லை. இந்த நூற்றுவரையும் வியாசமுனிவர் அதிரதர் என்றும், வீரர்களென்றும், யுத்தப்பயிற்சியுடையவர் என்றும், நீதிசாத்திரத்திலே வல்லவர் என்றும் புகழ்ந்துரைத்தனர். இது நிற்க, அப்பாற் செல்லுதும்.

ஆதிதேயர்—அதிதிகளை உபசரிப்போர். "செங்கழல் வேள்விகூராதிதேயரே" (வேத்திர. ௧௪) வைநதேயன்=விநதையின்மகன். காத்திரவேயர்=கத்திருவின்பிள்ளைகள். விநதையும், கத்திருவும் தக்கன் புத்திரிகள். வைநதேயன் என்றது கருடனை. காத்திரவேயர் என்றது பாம்புகளை. "வைநதேயனைக் காத்திரவேயரை" (சப்பவ. ௧௧௯.) மாதவி=மதுவின் மரபிற் பிறந்தவள். சாத்தகி=சத்தியகன் மகன். இவனுக்கு யுயுதானன் என்றும் பெயர். ராவணி=இராவணன்மகன். ஆநிலி=அநிலன் மகன்.

குரு என்பது ஆரியத்திலே பன்மை விகுதிபெற்றுக் குந்தி என்பது போல நின்று குருமரபினர் என்னும் பொருளை உணர்த்தும். அவ்வாறே இங்கேயும் பன்மை விகுதியோடு குருக்களென வந்து குருமரபினர் என்னும் பொருளை உணர்த்திற்று. "கொட்பனற் சுடவிறந்தமை கேட்டலுங்குருக்கள்" (வாரணா. ௧௩) கோதமன்

என்பதும் ஒருகால் தத்திதவிகுதிகெட்டுப் புணர்ந்து நின்ற பொழு தைப் பொருள்உணர்த்தலும் உண்டு. "கோதமன் றனக்குளங் கொதிக்குமாறு கூறுவான்" (வாரணு. கூஎ) இங்கே கோதமன் என்பது கோதமன் மரபினன் எனப்பொருள் பட்டது. இவ்வாறே வரும் தத்திதாந்தங்கள் இன்னும் பலவுள. அவையெல்லாம் கூறப் புகின் பெரிதும் விரியும். ஆதலின் இவ்வளவிலே தத்திதம் நிறுத் தப்பட்டது.

வரும்.

மஹாபாரதம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ருருஎ. | ச. | வந்தமையும், | வந்தமையும். |
| ,, | உங. | "குந்திபோசன்" | "குந்திபோசர்" |

சென்ற ஆவணிமாசச் 'செந்தமிழிலே' வந்த "மஹாபாரதம்" என்னும் விஷயத்திலே இந்தத் திருத்தங்களை வாசிப்போர்செய்து வாசிக்கக்கடவர்.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

உ

# அன்பு

"முன்பு பின்பின்றி மூவுலகத்திலும்
அன்பி னல்லாதோர் ஆக்கமுண் டாகுமோ" (கம்பர்.)

(I.) அன்பு என்பது யாதொரு பிரதிபலனுங்கருதாது, "தான் வேண்டப்பட்ட பொருளின்கண் தோன்றும் உள்ளநெகிழ்ச்சி." இந்நெகிழ்ச்சி உண்டாவதற்குக் காரணம் என்னை எனின், அதனை அடியில் வரும் திருஷ்டாந்தம் ஒருவாறு விளக்கும்.

உலகமெங்கும் நீக்கமற நிறைகின்ற ஒரு சக்தியுண்டு. அது ஆங்கில நூல்களில் காந்தசக்தி அல்லது மின்சாரம் (Electricity) என்று சொல்லப்படுகிறது. (மதுரை பிரஹ்மஞான சபையாரால் பிரசித்தப்படுத்தப்பட்டிருக்கிற மிதுனத்தைப்பற்றிய 5-வது இலக்கத்துண்டுப்பத்திரிகையைப் பார்க்க.)

இது அக்கினியின் அம்சம். உபநிஷத்துக்களில் பிராணன் என்று சொல்லப்படும் சக்தியின் ஒரு அம்சம் இது. இது மேல் (positive or high potential) என்றும் கீழ் (negative or low potential) என்றும் இருபான்மையது. இஃது ஒரு அற்புதமான மிதுனம். சாதாரணமாய் இவ்விரண்டும் கலந்து இருக்கும் நிலையில், இதற்கு எவ்விதச் செய்கையும், அஃதின்மையால், எவ்விதக் காட்சியும் இல்லை. பலவித உபாயங்களினால், இஃது இரண்டாகப் பிரிக்கப்படுமாயின், அப்போது தான், புலனுக்கு வெளியாகும். அந்நிலையில், ஏதேனும் வேலைசெய்தல் கூடும். அஃது இரண்டாகப்பிரிந்த நிமிஷம் முதற்கொண்டு, பிரிந்தவைகள், ஒன்றுபட அதாவது ஐக்யமாக, தீவிரமுயற்சி செய்கின்றன. இரண்டும் ஒன்றோடொன்று சேரச்செய்யும் முயற்சியும் அதன் காரணமான ஊக்கமும் இங்கு கவனிக்கத்தக்கவை. அம்முயற்சி அவ்வூக்கம் உலகப்பொருள்களில், பலவாறாகப் பரிணாமங்கள் கொண்டு விளங்குகின்றன. இது ஜடப்பொருளின்கண் இருக்கும்பொழுது ஆகர்ஷண சக்தியென்றும், சேதன வஸ்துக்களிலிருக்கின்றபொழுது, உயிர், பிராணன் என்றும் பெயர் பெறும்.

உலகவிகாசத்திற்கு அதிஷ்டானமாக இச்சக்தி இருக்கின்றது. இது பிரஹ்மஞான சபையாரால் வெளிவந்திருக்கிற புஸ்தகங்களில் போஹாட்டு (fohat) என்று சொல்லப்பெறும். இதனை தைத்திரிய உபநிஷத்தில் ரஸம் என்றும் (ரஸொவைஸ:) பிரஹத் ஆரண்யகம், சாந்தோக்கியம் இவ்வுபநிஷத்துக்களில் பிராணன் என்றும், பூமா என்றும் சொல்லப்பெறும். இதுவே "தேவிகாயத்திரி" யாம். விகாசமாயிருக்கின்ற உலகத்திலுள்ள சலனங்கள், சக்திகள், ஸ்வரங்கள், பிராணன்கள் யாவும் இந்தச்சக்தியின் பல பிரிவான பரிணாமங்களே. ஒரே ரஸமானது வேர், இலை, காய், கனி, பழம், வித்தாகப் பரிணமித்திருக்கின்றதுபோலவே, இந்தச் சக்தி பரிணமித்திருக்கின்றது என்பதை அறிவிப்பதற்காக இதை ரஸம் என்று உபநிஷத்துக்களும் கூறுகின்றன. இது ஈசுவர அம்சம். தமிழ் நூல்களில் ஈரம் என்றும், உயிர் என்றும் இதற்குப் பெயர் வழங்குகின்றன. அடியில் வரும் பாசுரங்கள் இந்தச்சக்திமயமான ஈசுவரன் எங்கும் பரந்துளன் என்பதை விளக்குகின்றன.

*காலினில் ஊறும் கரும்பினிற் கட்டியும்
பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்
பூவினுள் நாற்றமும் போலுளன் எம்மிறை
காவலன் எங்கும் கலந்து நின்றானே. (திருமந்திரம்.)

"விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்" (அப்பர் தேவாரம்.)

"இன்னுழை கதிரின் றுன்னணுப் புரையச்
சிறியவாகப் பெரியோன்" (மாணிக்கவாசகர்.)

"சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது" (திருமூலர்.)

"திடவிசும்பு எரி வளி நீர் நிலமிவை மிசைப்
படர்பொருள் முழுவதுமாய்அவைஅவைதொறும்
உடன்மிசைஉயிரெனக்கரந்துஎங்கும்பரந்துளன்,
சுடர்மிகுசுருதியுள் இவையுண்டசுரனே." (திருவாய்மொழி.)

---

* கால்-காற்று.

(2.) பிரகதாரண்ணியக உபநிஷத்தில், யாஜ்ஞயவல்கிய மஹரிஷிக்கும் அவர் அறிவுள்ள பத்நி—மைத்திரேயிக்கும் நடந்த சம்பாஷணையில், ஆன்மா, ஆன்மாவைத் தேடிச்சேருகின்றமையால் அங்கிகழ்ச்சி அன்பெனப்பெறும் என்று உபதேசம் விளங்குகின்றது. "சிவ" என்றால் வசீகரிக்கும் தன்மை. அதாவது:—ஒன்று மற்றொன்றைப் பற்றி இழுக்கும் தன்மை; ஆகர்ஷணசக்தி என்று ஸ்ரீமத்-அப்பய்ய தீக்ஷிதர் வியாக்கியானம் செய்துள்ளார். இக்கருத்திற்கு இணங்கவே திருமூலர் அடியில் வருமாறு உபதேசித்திருக்கிறார்.

"அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே."

சடகோபரும் பரம்பொருளை "என் அன்பேயோ" (திருவாய்மொழி. 10-10-7) எனக் கூவியழைக்கின்றார். இக்கருத்தைப்பற்றி அன்றோ! திருவள்ளுவரும்,

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு" என்றும்,

உபதேசித்திருக்கின்றார்.

ஆகவே, அன்பு என்றால் எங்கும்பரவியிருக்கின்ற, பிராணஸ்வரூபியான, அந்தர்யாமியான ஈசுவரனுடைய தன்மை எனக்கூறலாம். அதுவே உலகசிருஷ்டிக்கு ஆதாரம். அவ்வன்பின் இயல்பு தியாகம். இத்தியாகமே, உலகவிகாசத்திற்கு முதற்காரணமாம். வேதத்திலுள்ள புருஷஸூக்தத்தின் உண்மை இதுவே; இவ்வுலகம் மேன்மேலும் விகாசமுறையில் அபிவிருத்தியாகிக்கொண்டே வருகிறதற்குக் காரணம் இவ்வன்பே—அதன் பரிணாமமான தியாகம் நிகழ்கின்றமையாலேதான் உலக விகாசமுறையில், ஜீவன் மேன்மேலும் பலசரீரங்கள் அடையப்பெறுதற்கு ஏதுவாகும்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாநின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்."

ஜீவராசிகளின் சரீரத்தொடர்ச்சியில் ஆன்மா நடைபெற்று வருகிறதில், தியாக ரூபமான அன்பு நிகழப்பெறினும், அவ்வன்பு நான் என்ற பிரஞ்ஞை அதாவது அறிவு இன்றி இருக்கின்றது. அதை 'அன்பு' என்று வழங்குவதில்லை. அரிய மானுட சரீரம் ஆன்மாபெற்றதின்மீது, நான் என்ற பிரஞ்ஞையுடன் அன்பு பாராட்டப்பெறும். அங்கிலேயிற்றான் அன்பு என்று சொல்லப்படுகிறது. அதனால், திருவள்ளுவரும்,—

" அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு."

என்றார். ஆன்மா பெறுதற்கருமையான இம்மனுஷ சரீரத்தை அன்போடு பொருந்துதற்கு வந்த நெறியின் (விகாசமுறையில் ஜீவராசிகளின் தொடர்ச்சியின்) பயன் என்று அறிந்தோர் சொல்லுவர். ஆக, மனிதனிடம் அன்பு இன்றியமையாததர்மமென ஏற்படுகிறது.

(3) அன்புடையான் என்றால் அத்தன்மை தன்னிலிருக்கின்றமையை உள்ளபடி உணர்பவன் என்பதாம். அதுவே மெய்யுணர்வு; அதாவது:—மருள் நீங்கிய ஞானம். வஸ்துக்களின் நாம ரூபங்களை விலக்கி உண்மையாய் எஞ்ஞான்றும், ஒன்றாய் உள்ளதை உணர்ந்து அனுபவிப்பதே தெள்ளிய ஞானம்.

கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுற மாமலர் இட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உணர்பவர்க் கல்லது
தேன் அமர் பூங்கழல் சேர ஒண்ணாதே. (திருமந்திரம்.)

"ஊனினை நீக்கி உணர்பவர்"—வேற்றுமைப்படுத்தும் ஜீவகோடிகளின் உடல்களைக் கவனியாது அவைகளின்கண் அந்தர்யாமியாக இரு

க்கின்ற உயிரை—ஈசனை உணர்பவர்தாம் இறைவன் அடி சேருவார். இக்கருத்தையே அடியில் வரும் செய்யுள்கள் உணர்த்துகின்றன.

மண்ஒன்று தான்பல நற்கல மாயிடும்
உள்நின்ற யோனிகள் எல்லாம் ஒருவனே
கண்ஒன்று தான்பல காணுந் தனைக்காணா
அண்ணலும் அவ்வண்ண மாகிநின் றானே. (திருமந்திரம்.)

யானும் தானாய் ஒழிந்தானை யாதும் எவர்க்கும் முன்னோனைத்
தானும் சிவனும் பிரமனு மாகப்பணைத்த தனிமுதலைத்
தேனும் பாலுங் கன்னலும் அமுதுமாகி தித்தித்து என்
ஊனின் உயிரின் உணர்வின் நின்ற ஒன்றை உணர்ந்தேனே.

(திருவாய்மொழி.)

ஆகவே, துவைத நாட்டம் அற்று, வேற்றுமைக்குக் காரணமாம் அகந்தை, மமதை அற்று நின்று, உலகெலாம் தன்னிலும், தன்னை உலகிலும் பார்க்கிறவனே, எல்லாப்பிராணிகளிடத்தும் செந்தண்மை பூண்டு ஒழுகுகிறவனே - ஞானியாவான். ஞானம் என்பது ஒருமை உணர்வு; ஏகீபாவ உணர்வு.

(4) அன்பு என்பது அவ்வுணர்வின் பயனாய் மனத்தில் உண்டாகும் நெகிழ்ச்சி-மன இளக்கம். இதன்காரியம் ஜீவகாருண்ணியமேயாம். "அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார், என்பும் உரியர் பிறர்க்கு" என்றார் திருவள்ளுவர். ஏன் ஜீவகாருண்ணியம் இருக்கற்பாலது என்றால், வேற்றுமைப்படுத்தும் உடலை நீக்கி உட்புகுந்து சிந்தனை செய்தால், 'தத்துவமசி' (= "நீயதுவானாய்" என நின்ற பேருரை) என்ற மஹாவாக்கியத்தின் உண்மை அனுபவசித்தமாக ஏற்படுகின்றமையால் என்றுணர்க.

இக்காரணத்தினாற்றான் ஜீவகாருண்ணியமில்லாதான், எத்தனைய பூஜை, வேள்வி செய்திடினும், இறைவனைக்காணான் என்பது பெரியோர் துணிபு.

" என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்

அன்போடு உருகி அகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை எய்த ஒண்ணுதே" (திருமந்திரம்.)

"ஈரமுடையவர் காண்பார் இறைவன் இணை அடி" ஈரம் - அன்பு)

ஜீவகாருண்ணியம் மிகுந்து இருக்கின்றதை, அல்லது, இருக்க வேண்டுவதை நோக்கி, சிறப்பாய் பிராமணர்கட்கு 'அந்தணர்' என்ற உயர்வு பெற்ற பெயர் கிடைத்துள்ளது.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்" (திருக்குறள்.

இரக்கமுடையார் இருதயத்தின்கண் ஈசன் உள்ளான் - என்றதை* "அந்தணர்கம் சிந்தையானை" என்பதனுல் அப்பரும் திருமங்கையாழ்வாருங்கூறியருளினுர்கள்.

பகவத்கீதை 12-ம். அத்தியாயத்தில் அத்துவைதத்தின் உயர்வான, நிர்குணபிரஹ்ம உபாசனைசெய்கின்றவரும் மோக்ஷத்தை அடைவார்கள் எப்போது என்றுல் [ஸவ-ஹ-ரு தஹிதெரா.தாः] "எல்லாப்பிராணிகளிடமும் கருணையைப்பாராட்டுவார்களாகில்" என்று ஸ்ரீ பகவான் கிருஷ்ணசாமி உபதேசித்திருக்கின்றுர்.

(5) ஜீவகாருண்ணியம் இருக்கவேண்டியதற்கு இன்னும் ஒரு காரணம், அடியில் வரும் பாசுரங்களில் விளங்குகின்றது.

"எவ்வுயிரும்பராபரன்சந்நிதியதாகும்
இவ்வெங்குமுயிர்உடல்அனைத்தும்ஈசன்கோயில்"

"படமாடக்கோயில்பகவற்குஒன்றீயின்
நடமாடக்கோயினம்பர்க்கங்காகா
நடமாடக்கோயினம்பர்க்கொன்றீயின்
படமாடக்கோயிற்பகவற்கதாமே."

(திருமந்திரம்.)

நடமாடக்கோயில்—மனிதர், ஜீவராசிகள், பக்தர்கள் எனப்பொருள் பெறும்.

---

* தேவாரமும் நாலாயிரப்பிரபந்தத்தில் திருநெடுந்தாண்டகமும் பார்க்க,

*

(6) ஆழ்வார்களும் நாயன்மாரும் ஆகிய பெரியோரெல்லாம் ஆத்மஞான பக்திகள் இரண்டையுமே இன்றியமையாக்குணங்களாக வேண்டிக் கூறுவர். ஞானமும் அன்பும், மோக்ஷத்தைச்சேர்ப்பிக்க, இரண்டுபக்ஷங்களாகும். இவை இரண்டிற்குமுள்ள பேதம்யாதெனில், இஃது இனிக்கும் கனியென்று உணர்வது போல்வது ஞானமாகும். அக்கனியை விடாமற் சுவைப்பது போல்வது பக்தியாகும். சுவைத்தவனே சுவை அறிவான்.

விறகிற்றீயினன் பாலிற்படுநெய்போல்
மறையநின்றுளன் மாமணிச்சோதியான்
உறவுகோல்நட்டுஉணர்வுகயிற்றினால்
முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே. (அப்பர்)

உணர்வு— ஞானம். உறவு—அன்பு, பக்தி.

அன்பேதகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா—என்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான். (பூதத்தாழ்வார்)

ஆர்வம்—பரபக்தி.

(7) இவ்வன்பு கீழாயினோரிடம் பற்றி நிகழ்ந்தால் கருணையென்று பெயர். இதன்லக்ஷணம் தியாகமாம். நம்குழந்தைகள், நம்மை நம்பியதாழ்ந்தவேலைக்காரர்கள் முதலாயினோர் இதற்குத்திருஷ்டாந்தம்.

இவ்வன்பு சமானமாயினோரிடம் பற்றி நிகழ்ந்தால், சிநேகம் எனப்பெயர் பெறும். ஒத்தபண்பும், ஒத்தநலனும், ஒத்த செல்வமும், ஒத்த கல்வியும் உடையாரிடம் உண்டாகும் அன்பு நெகிழ்ச்சி. ஈதலும், ஏற்றலும் இருதரத்தாரிடமும் பொருந்தும். முன்னதுபோன்று, தியாகம் ஒருவர்பாலும், பெறுதல் மற்றவர்பாலும் இருக்கமாட்டாது. சமானத்தன்மை என்பது யாதாம் ஒருவிஷயத்தைப்பற்றியாவது நடை பெறுதல் வேண்டும். இவ்வன்பு மேலாயினோர் பால் நிகழின் பக்தியென்றும், பேரன்பென்றும் வழங்கும். முக்கியமாகப்பெற்றோர், அறிஞர், குரவர், கடவுள் இவர் பால் நிகழும் அன்பு இதுவாம்.

(8) பேரன்பாகிய பக்தியைப் பற்றிப்பேசுவோம்.

அகங்காரம் மமகாரம் அற்று, முற்றும் நம்மை மறந்து, கடவுளே அடைக்கலம் என்று மனமுருகி அகம் குழைந்து வருந்துவார்க்கன்றி, ஈசன் அருள் கிடையாது. மற்றப்பலவாருன உபாயங்கள் வீண் என, மாணிக்கவாசகர் அடியில் வருமாறு உபதேசித்துள்ளார்.

“ உறையுளிஒற்றிமுயன்றவர்க்கொளித்தும்
ஒற்றுமைகொண்டுநோக்கும்உள்ளத்து
உற்றவர்வருந்தஉரைப்பவர்க்கொளித்தும்
மறைத்திறநோக்கிவருந்தினர்க்கொளித்தும்
இத்தந்திரத்திற்காண்டுமென்றிருந்தோர்க்கு
அத்தந்திரத்தின் அவ்வயின்ஒளித்தும்
முனிவற நோக்கி நனிவரக்கௌவி
ஆணெனத்தோன்றி அலியெனப்பெயர்ந்து
வாணுதற்பெண்ணெனஒளித்தும் சேண்வயின்
ஐம்புலன் செலவிடுத்து அருவரை தொறும்போய்த்
துற்றவைதுறந்த வெற்றுயிர் யாக்கை
அருந்தவர் காட்சியுட்டிருந்த ஒளித்தும்
ஒன்றுண்டில்லை என்றறி வொளித்தும்
பண்டேபயில் தொறும் இன்றேபயில் தொறும்
ஒளிக்குஞ்சோரனைக் கண்டனம்.”
“ அவன் பக்திவலையிற் படுவோன்காண்.”

மனப்பக்தியால் அன்றி அவரை அடைதல் முடியாது. இந்தப் பக்தியை 4-படியாக—கீதையில், ஸ்ரீகிருஷ்ணபகவான் சூசிப்பித்திருக்கிறார்.

9 -வது அத்தியாயம்—26-வது சுலோகம்.

𑌪𑌤𑍍𑌰𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌫𑌲𑌂 𑌤𑍋𑌯𑌂 𑌯𑍋 𑌮𑍇 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 ।
𑌤𑌦𑌹𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌹𑍃𑌤𑌮𑌶𑍍𑌨𑌾𑌮𑌿 𑌪𑍍𑌰𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥

இதன் சாதாரண அர்த்தம்:—

(இன்னும் வரும்.)

ஆத்மநாதன்.

திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராண அரும்பதவிளக்கம்.

(௫உக-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

[பழைய ஏட்டினின்று எடுத்தெழுதியது.]

## விறன்மிண்டநாயனார்புராணம்.

(க) வேணியாரது கழலைப்பரவி மழுவைப்பெற்ற மகத்துவம் பொருந்திய தவமுனிவனாகிய பரசுராமன் மழுவாற் பெறுநாடு. நிலனின் செழுவளம்-நிலவளம். நாடு - நாடாகிய.

(உ) வாரிசொரியுங்கதிர்முத்தம் - கடன்முத்தம். மூதூரென்று சொல்லப்படுகின்ற நகை. மூதூரானது செங்குன்றூராம்.

(௩) செங்குன்றூர் என்னும் பெயரால் விளங்கி உலகிற் பரம்பும் பெருமையையுடைய அதுதான், அன்னங்கள் பயில்கின்ற வயலுழுவாலமைந்த வளத்தால் ஆராய்ந்தவேதஞ்சொன்ன முறைமையின்வழி ஒழுகுகின்ற சுத்தமான குடிமைத்தலைமையில் நின்ற சூத்திரரும், நிலையான உயர்குலத்திற் பிறந்தவேதமாகிய நூலின் முறைமையையுடைய அந்தணரும் வாழ்கின்ற பதியாம்.

(௪) பெருமையின் எல்லையையறிய முடியாதவர் விறன்மிண்டர். எல்லை தெரியவொண்ணாதவராகிய சிவபெருமானுடைய மெய்ப்பத்தர் எனினுமமையும்.

(௫) விரும்பி - விரும்பலால். அடியார் கூட்டங்களை முன்வணங்கியதன் பின்னரே சிவனுடைய பாதங்களை வணங்கப்பெற்றவர்.

(௬) பொற்பொடியொடு வீழ்கின்ற அருவியையுடைய மலைநாட்டைக்கடந்து, பூமியெங்குஞ்சென்று நம்மையாளாகவுடைய சிவனடியார்களது திட்பமான ஒழுக்கம்பொருந்திய நடையைச்செலுத்தி; எனவே, அவர்களுக்கு வந்த இடையூறு நீக்கிக் குற்றேவல் புரிந்து என்பது கருத்து.

(எ) ஒருவாறொதுங்கிச் சென்ற வன்றொண்டரை அடியார் குழாங்களுக்குப் புறம்பென்று கூறுதலால், சிவனுடைய திருவருளால் பெருகாநின்ற பெரும்பேற்றைப் பெற்றார்; ஏனையவற்றையும் பெறநின்றார்.

(அ) ஆகாயம் வரைக்குமுயர்ந்த மேருவாகிய வில்லைவளைத்த சிவனடியார் கூட்டத்தை வணங்காமல் செல்லும் நம்பியாரூரருக்குந் தலைவராகிய தன்மையையுடைய சந்திரனை யணிந்து ஆபரணமாக நிறைந்த பாம்புகளையணிந்த சிவனுக்கும் அடியார் கூட்டத்திற்கும் புறம்பு என்று கூறி அவரிடத்தே கோட்டமற்ற கிருபையைப்பெற்றார்; இனி எவர்தான் அவர் பெருமையைக்கூற வல்லவர். ஊரனுக்கும் என்பதில் உம்மை இழிவு சிறப்பும்மை. ஊரனுக்கு மாத்திரமோ சிவனுக்கும் அடியார் கூட்டத்திற் புறம்புளதென்பது கருத்தாகலின், அரவம் புனைந்தார்க்குமென்பதில் உம்மை உயர்வு சிறப்போடு இறந்ததுதழீஇயிற்று.

(௯) பூமியுய்யவும், நாமுய்யவும், நல்ல சைவசமய ஒழுக்க நெறியுய்யவும் சுந்தரமூர்த்திநாயனார் திருத்தொண்டத்தொகையை முன்னரே பாடுதலால், சிவனடியாருடன் உளதாந்தன்மை இவருக்கில்லையுமென்றார்.

(௧௦) வேறுபிறிதென் - இதற்கு வேறாகப் பிறிதொன்றைச் சொல்வதென்ன பிரயோசனம்.

---

## அமர்நீதிநாயனார்புராணம்.

(௧) மேவிய என்னும் பெயரெச்சம் பொழில் என்னும் பெயர் கொண்டது. நாட்டிலுள்ள பதியெனக் கூட்டுக. காரின்மேவிய - மேகமண்டலம் வரைக்குமுயர்ந்த.

(௨) எந்த நிலங்களினும் உள்ளவாய் வருகின்ற வாணிகத்தியல்பா மங்கிலைக்கண்.

(ங) உதவி - உதவலால். கீள்-அரைஞாணுக்குப் பிரதியாகத் துறவிகள் அரையிற்கட்டிக்கொள்வது.

(௪) சமைத்தார் - சமைத்து. முதல்வரானவரது நல்லூர். தூயோர் - அமர்நீதிநாயனர்.

(௫) காளகண்டருடைய திருவிழா அழகைச்சேவித்து. அவ்வடியாருடைய அருளைப்பேணி.

(௬) பாலசந்திரனை யணிந்த தளிர்த்த சடையையுடைய பெருந்தகையாகிய கறைக்களத்திறை. மனத்தை நிறைந்த அன்பு; நிறைந்த என்பதன் விகாரமெனினுமாம்.

(௭) அழகிய மயிர்முடி. பச்சைத்தருப்பையாலாகிய பவித்திரத்தின் மரகத வொளியும். முண்டகம் - நெற்றி.

(அ) முஞ்சிப்புல்லால் நாணைகப் பொருந்த முடிந்து அதனைச் சாத்தி யருளிய திருவரையில் எவர்க்குந் தஞ்சமான பெரிய வேதமான கௌபீனவஸ்திரத்தையும்.

(௧0) எளிய இந்தமடத்திற் காணும்படி வரக்கூடாத பெருந்தகையையுடைய நீர். படி - தன்மை. பயின்றுசெய்ததாகிய தவம்.

(கங) அழகிய நீரையுடைய பொன்னி. அணங்கென்பதற்குப் பெண்ணெனினுமமையும்.

(க௪) இகழாது - இது கோவணந்தானே யென்று பராமுகஞ் செய்யாது.

(க௫) கன்னையாகிய மடு. அடுத்த - சமீபத்துள்ள.

(க௬) கந்தை கீளுடை கோவணமாகிய இவையிருக்குமிடத்தை விட்டு வேறொரு காவலாகிய இடத்தைச் சிந்தித்து.

(க௭) பானல் - கருங்குவளை. அம் சாரியை. வானம் - முகில்.

(க௯) கோவணக்கள்வர் - சிவபெருமான்.

(௨0) வேறாகிய இடம் - அதை கங-ம் செய்யுளிற் காண்க. கோவணங்கண்டிலர். முன் நானதை என்னசெய்தேனென்று.

(உக) கிழித்த கோவணம் - போனவழியின் மீண்டுமயமின்றித் தப்பியது என்று.

(உஉ) சிவனடியார் குளிரால் வருந்துவர் என்பதுகொண்டு உள்ளே நிற்கவும் மாட்டாதவராய்.

(உச) மாறு - மாறாக.

(உரு) சாலவும் நாள் இடையே கழிந்ததுமன்றி.

(உசு) ஈங்கு - இதைப்போன்ற.

(உஎ) மானை மறைத்து.

(உகூ) நீர்தப உடன்பட்ட ஆடையையும் மற்றவற்றையும் என்ன செய்ய, நான்றரிக்குங் கோவணம்போலும் ஒரு கோவணத்தைத் தருதற்கிசைவீராக என்றருள.

(கூக) எடை - நிறை.

(கூங) கோடு - தட்டு. நிறை குறைந்து உயர்ந்த தட்டு.

(கூச) இக்கோவணமொன்றுக்கலகில் கோவண மொத்தில உலகிலில்லதோர் மாயை யென்றதிசயித்து.

(கூரு) அன்பு இடும் முட்டில் அன்பர்தந்தட்டுக்கு-அன்மையபிடுகின்ற முட்டற்ற தம் பத்தர்களது தட்டுக்கு, முதல்வர் மட்டில் நின்றதட்டு - பரமசிவன்மட்டினின்ற தட்டானது, - அருளாடுகின்ற அருளொடும் தாழ்வு உறும் வழக்கால் - அவ்வருளினுலே (முன்னும்) தாழ்ந்து போகிற வழக்கத்தினுல் இப்போதும் பட்டு முதலிய பலவற்றை இடவும் பத்தரதுதட்டுயர முதல்வரது கோவணத்தட்டுத்தாழ்ந்ததென்க. அருளையுடைய பரமசிவன் அன்பையுடைய அடியவர்களுக்கு எளியவராந்தன்மையுடையவரென்று வேதாகமங் கூறுதலினுலும் அவ்வாறு அவருடைய செய்கையிற் காணப்படுதலாலும் அவ்வழக்குப் பற்றி இப்போதும் அன்பையுடைய நாயனுரது தட்டு மேற்பட முதல்வருடைய தட்டுத் தாழ்ந்தது என்று சொற்சாதுரியம் படக்கூறினுர். இரண்டாமடி முதலில் மாட்டு என்பது மட்டு எனக்குறுகி நின்றது.

(ங௬) மானம் - அளவு. இது என்றது முந்திய தகைமையை; எனவே, மேற்படலாயிற்று. தனத்தையிட, அதைத்தேவரீர் பெறல் வேண்டுமென்று வணங்க.

(ங௮) பல்வகைத்திறத்துலோகம் - மூலலோகங்கள். புணர்ச்சிலோகம்-சையோகலோகம்; வெண்கலம் முதலியவை.

(௪0) நாங்கள் ஏற, எம்மை நீர் பெற்றுக்கொள்வது.

(௪௧) குற்றம் நீங்கிய அடிமைத்திறத்தைச் செய்த அமர்நீதிநாயனார் பிராமணருக்கெதிரே நின்று அச்சம் முன்னரே தோன்ற விண்ணப்பஞ்செய்தலும், சிவபிரானனவர் திருவருளோடு அவருடைய நிலைமையை தராசு என்னுங் காரணத்தால் நிச்சயித்து இந்தப் பொய்யாகிய பிரபஞ்சத்தினின்று மீட்டேற்றுவாராய், ஏறுதற்குடன்பட்டார். சலம் - ஏது, முகாந்தரம். கலம் எனவும்பாடம்.

(௪௬) ஒரு வழியாக முதன்மையையுடைய திருநல்லூரில் முன்னரே தாம் வீற்றிருக்கின்ற திருக்கோலமாகின்ற வாமபாகத்திற் பொருந்திய உமாதேவியாருந்தாமுமாய் ஆகாயத்தினின்று காட்சியை முன்னரே கொடுத்தருளினர்; கோலமே யாங்காட்சி எனக்கூட்டுக.

(௪௭) சாமீபத்தைக்கொடுத்தார் என்பது கருத்து.

(௪௮) கொடுத்த - திருவருளைக் கொடுத்த.

(௪௯) ஆண்டுகொள்ளப்பெற்றவர் - சுந்தரமூர்த்தி.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ. சதாசிவம்பிள்ளை.

# நன்னூல் விருத்தியுரைக்குறிப்பு.

(சிறப்புப்பாயிரவீற்றில்)பாயிரத்தை வடநூலார்உபோற்காதம் (உபொத்காதம்)என்பர் பொதுப்பாயிரம் ரு-வது சூத்திரம் "மரபுநிலைதிரியாமாட்சியவாகி - யுரைபடுநூறாமிருவகையியல-முதலும் வழியுமெனநுதலியநெறியின்" எனத்தொல்காப்பிய மரபியலகத்து நூலிரண்டெனவோதியிருப்பச் சார்புநூலெனவொன்றுகூறிய தென்னையெனின்; ஒன்றன்வழியாகச் செய்வனவெல்லாம் வழியேயாயினுமவை முன்னோர்நூலின்முடிபொருங்கொத்தலுந் திரிபுவேறுடைத்தாதலுமென இருவேறுவகைப்பட நிகழ்கின்றமையினதுபற்றிச் சார்புநூலென வேறுகோடலுமியையுமெனவிடுக்க. அங்ஙனந்திரிபுவேறுடையதூஉம் பொருளாநெருங்கொத்தலின் மரபுநிலைதிரியாமையின் வழிநூலென்றற்கேற்புடைத்தாதலுமறிக. திரிபுடையவாயினு மரபுநிலைதிரியாதனயாவையெனிற் செய்யுளியலுட்கூறிய வொற்றளபெடையை யளபெடையதிகாரப்பட்டமைநோக்கி யுயிரளபெடையைச் சாரவைத்துக் கூறுதலும், தனிநிலை, முதனிலை, இடைநிலை ஈறெனுநால்வகையிடத்தை மூன்றிடமென வடக்குதலும் மெல்லெழுத்து மிகுதலாவயினான'வென்றவாறே தங்கை - நங்கை - எங்கை - செவி - தலை - புறம் என மகரங்கெட் டினமெல்லெழுத்து மிகுமென்னாது மகரமேயினமெல்லெழுத்தாய்த் திரியுமென்றலும், அகமென் கிளவிக்குக் கைமுன்வரின் முதனிலையொழிய முன்னவைகெட்டு மெல்லெழுத்து மிகுமென்னாது அங்கையெனக் ககர வகரங்கெட்டு மகரந்திரிந்து முடியுமென்றலும், முதலீரெண்ணினொற்றுரகரமாகுமுடனிலை ரகரமிரண்டெண்ணிற்கு நடைமருங்கினவென்றவாறே கூறுதிரண்டினொற்றுமீரேக நின்ற ரகரவொற்றின்மேலுகரம் வந்து செய்கைப்பட்டுமுடியுமென்றலும், நாகியாதெனை யகரம்வரும்வழியுகரங்கெட்டிகரந்தோன்றுமென்னா துகரமேயிகரமாய்த்திரியுமென்றலும், நெடுமுதல் குறுகுமொழிமுன் பொதுப்படவாறனுருபிற்குநான்கனுருபிற்கும் அகரநிலையுமெனக்கூறி ஆறனுருபினகரக்கிளவியீருக்கரமுனரக் கெடுதல்வேண்டுமென்னாது குவ்வினவ்வருமென்றொழி

தலும், ஆடிக்குக் கொண்டானென்புழி இக்குச்சாரியையென்னுதுகுச்சாரியையென்றலும், வற்றுச்சாரியை வகரங்கெட்டற்றென நிற்குமென்னாது அற்றுச்சாரியை யென்றே கோடலும், இன்னென்சாரியை இற்றெனத்திரியுமென்னாது இற்றென்பதுவேறுசாரியையெனக்கோடலும், அக்கென்சாரியை மெய்மிசையொடுங்கெடுமென்னாது அகரச்சாரியையெனக்கோடலும், அ ஆ வென மூன்றும் பலவறிசொல்லென்னாது உண்குவ உறங்குவ என்புழிவகரத்தை வேறுபிரித்திடைநிலையெனக்கொண்டகர விகுதியென்றொழிதலும், அகம் புறம் எனப்பகுத்தவற்றைத் தம்முள்வேறுபாடு நோக்கி அகம்-அகப்புறம். புறம்-புறப்புறம் எனநான்காகப்பகுத்தலும், வெட்சித்திணை உழிஞைத்திணைகளின் மறுதலை வினையை விற்றுவினையாதலும் வேற்றுப்பூச்சூடுதலுமாகிய வேறுபாடுபற்றி வேறுதிணையாதலைக்கொண்டொழிதலும், இன்னோரன்னவைபிறவுமாம். இவையிங்ஙனம் வேறுபடினும் புணர்ச்சிமுடிபுஞ் சொன்முடிபும் பொருண்முடிபும் வேறுபடாமையின் மரபுநிலை திரியாவாயின.

---

## சொல்லதிகாரம்.

### பெயரியல்.

(258) சகம் - நிலையில்லாதது. இதனை ஜகத் என்பர் வடநூலார். (௨௫௯) சுதந்தரம் - தன்வயமுடைமை.

(260) சமயம், சங்கேதமென்பன ஒருபொருட்கிளவி. சங்கேதமாவது இச்சொல்லினின்று மிப்பொருளுணரற் பாற்றென்னு மீசுரனதிச்சை.

அவாய் நிலையாவது எச்சொற்கெச்சொலில்லாவிடின் வாக்கியப் பொருளுணர்ச்சி யுண்டாகுதலில்லையோ அச்சொல்லோடு தொடர்தல். வரலாறு: ஆவைக்கொணரென்புழி ஆவை யென்பது மாத்திரஞ் சொல்லிக் கொணர என்னு மொழிகூறாவிடின் ஆவை யென்பது வாக்கியப் பொருளுணர்ச்சியுண்டாக்காது, ஆகலால் கொண

என்பதனோடு தொடர்தல் ஆவை யென்பதற்கவாய் நிலையாயிற்று. அவ்வாறே கொணா என்பதற்கும் ஆவை யென்பதனோடுமவாய்நிலையாதலறிக. அவாய்நிலையை வடநூலார் ஆகாங்க்ஷை என்பர்.

தகுதியாவது தடையுணர்ச்சியின்மை. வ - று: நெருப்பானனையென்புழி நனைத்தலி னெருப்புக் கருவியன்றென்னு முணர்ச்சி தடையுணர்ச்சி. இவ்வுணர்ச்சி யிருத்தலால் நெருப்பானனை என்னும் வாக்கியத்திற் பொருளுணர்ச்சி இன்றாயிற்று. நீரானனையென்புழி நனைத்தலினீர் கருவியாதலாற்றடையுணர்ச்சி இன்றாயிற்று. ஆதலால் வாக்கியப்பொருளுணர்ச்சியுண்டாயிற்று. தகுதியை வடநூலார் யோக்யதா என்பர்.

அண்மையாவது காலமிடையீடின்றிக் கூறலும், வாக்கியப் பொருளுணர்ச்சிக்குக் காரணமல்லாத மொழி இடையீடின்றிக் கூறலுமாகிய விரண்டுமாம். வ - று: நாழிகைக்கொருசொல்லாக ஆற்றங்கரைக்கணைந்துகனிகளுளவாகின்றன என்பது சொல்லப்பட்டால் வாக்கியப்பொருளுணர்ச்சி யுண்டாகாது. மலையுண்டானெருப்புடையது தேவதத்தன் என்புழி மலை நெருப்புடையது என்னும் வாக்கியத்தாலுண்டாகும் பொருளுணர்ச்சிக்குக் காரணமல்லாத உண்டான் என்னுஞ்சொல் அச்சொற்கிடையீடாக நின்றது. உண்டான் தேவதத்தன் என்னும் வாக்கியத்தாலுண்டாகும் பொருளுணர்ச்சிக்குக் காரணமல்லாத நெருப்புடையது என்னுஞ்சொல் அச்சொற்கிடையீடாக நின்றது. இவ்வாறிடையீடிட்டுக்கூறாமல் மலை நெருப்புடையது, உண்டான் தேவதத்தன் என்று கூறுவதாம். அண்மையை வடநூலார் ஆஸத்தி என்பர்.

(264) நாலடியார், அறிவின்மை, "நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை, பண்ணப் பனைத்த பெருஞ்செல்வ - மெண்ணுங்கால் - பெண்ணவாயாணிழந்த பேடியணியாளோ, கண்ணவாத் தக்க கலம்."

அலி வந்தான், அலியர் வந்தார், மகன்மா வந்தான் என உதாரணங்காட்டுவர்.

(267) இவர் குழூஉக்குறியையும் வழக்குநெறியென உடனெண்ணினார். "குழூஉவின் வந்த குறிநிலைவழக்குச் சான்றோர் வழக்கின்கண்ணுமவர்செய்யுட்கண்ணும் வாராமையினமைக்கப்படா" எனச்சேனாவரையர் அமைத்தமையான் அதுவழக்குநெறியாகாமையறிக.

(269) "அறத்தாறிது வென" என்பது ஆகுபெயருளடங்குதலின் வேறோதல் பொருந்தாது. "குன்றுவிளையுணுயர் நிலந்துன்புற்றுத் - தாவென்றிரப் பாடன்கை" என்றாற்போல வெழுத்துக்களையெடுத்துக் கொண்டன சொல்லன்மையானாகுபெயராதற் கேலாமையின் வேறோதலமையுமென்க. இதில் இம்மூன்றற்குறிப்பெழுத்துக்கள் குரலும் விளரியும் உழையும் துத்தமும் தாரமும் இளியும் கைக்கிளையுமாகிய ஏழிசைகளையுங் குறிப்பானுணர்த்தின.

ஒன்று-ஞானம், இரண்டு-காரியாகாரியங்கள், மூன்று-நட்புப் பகையுதாசீனம், அடக்கி - உட்கொண்டு, நான்கு-யானை தேர் குதிரை காலாள், ஐந்து பஞ்சேந்திரியங்களை, ஆறு வழு என்றது "நாடிய நட்புப் பகை செல்வ நல்லிருக்கை, கூடினரைப்பிரித்தல் கூடலார் திடிலா, வேட்டங்கடுஞ்சொன்மிகுதண்டஞ்சூதுபொரு, ளிட்டங்கட்காமமிவையேழு" இவ்வாறனையும் பெருக்கி ஏழினையுங்கடிந்து. ஒன்று ஆன்மா, இரண்டு புண்ணியபாவம், மூன்று காம வெகுளி மயக்கம், நான்கு சாமதான பேததண்டம், ஐந்து சப்தஸ்பரிசரூபரசகந்தம், ஆறு படைகுடிகூழமைச்சு நட்பரண், என்றமைப்பினுமமையும் (வெண்பாமாலை, பாடாண்படலம் 37-ம் பாட்டுரை.)

(271) தொல்-" அவற்று-ளியற்சொற்றாமே-செந்தமிழ் நிலத்து வழக்கொடுசிவணித், தன்பொருள் வழாமையினிசைக்குஞ்சொல்லே"

புனனாடென்றாற்போலப் பாண்டி எனப் பொதுப்படக்கூறாது தென்பாண்டி என ஏகதேசத்தைப் பிரித்துக் கொடுந்தமிழ் நிலத்திற் சேர்த்தமையானு மஃதுரையன்றென்க. திருவாசகம் திருவம்மானை 10-ம் கவி 'தண்ணார் தமிழளிக்குந்தண்பாண்டிநாட்டானை.' திருநாவுக்கரசுநாயனார் புராணம் 289 'தமிழ்நாட்டிற் போனார் ஞா

னத்தலைவனுர்.' ஷை 392-'நீர்தமிழ் நாட்டிடைநின்று மெழுந்தருளி' ஷை 400-'தமிழ்நாடு காண்பதற்கு மனங்கொண்டார்.' ஷை 410'பொங்கு தமிழ்த்திருநாட்டு.' ஷை 412-தேம்பொழியுஞ் செந்தமிழ் நாட்டின். நம்பியாண்டார் நம்பி திருவந்தாதி 26-இருந்தமிழ் நாட்டிடை. திருஞானசம்பந்தர் புராணம். 652-பானல் வயற்றமிழ் நாடு. 659-சென்றகாலநற்றமிழ் வேந்தனுர். ஷை 750-குலச்சிறை-தண் டமிழ்நாட்டு மன்னன். மங்கையர்க்கரசியார்புராணம் 1 இருந்தமிழ் நாடுற்ற இடர்நீங்க. திருக்கோவையார் - சிறைவான் - உயர்மதிற்கூடலினாய்ந்த வொண்டீந்தமிழின்.

(272) தொல் "ஒருபொருள்குறித்த வேறுசொல்லாகியும், வேறுபொருள்குறித்த வொருசொல்லாகியும், இருபாற்றென்பதிரிசொற்கிளவி."

இலக்கணவிளக்க நூலார் யான் யாம் நீ நீர் என்பன என் எம் நின் நும்மெனத்திரிந்தாற்போல மலை என்னுஞ் சொல்லே விலங்கல் அடுக்கல் என்றற் றொடக்கத்தனவாய்த் திரிதலிற்றிரிசொல்லெனப்படுமெனவும் அது திரியுங்காற் கிளியென்பது கிள்ளையென வுறுப்புத்திரிந்தும் தத்தையென முழுவதூஉந் திரிந்தும் வருமெனவுங் கூறினார். மலையென்பதே விலங்கல் அடுக்கல் என்றற்றொடக்கத் தனவாய்த் திரியுமெனின் அவையெல்லா மொருசொல்லெனல் வேண்டும், அவ்வாறன்றி "ஒருபொருள் குறித்த வொரு சொல்லாகிய" மெனவும் உடம்படுவர் பொற்றொடல் புள்ளிமென்பனவற்றைப் பரியாய நாமங்கள் எனவுமவர் தாமே கூறலின் அவர்க்கது கருத்தன்றென மறுக்க.

தொடரும்.

ஜி. சதாசிவப்பிள்ளை.

நாஷனல் ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதன்.

நா-நீ-பத்திராதிபன்.

# நல்லொழுக்கம்.

(௫௰௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

[ஸ்ரீ : இலக்ஷ்மணப் போற்றிகள் மொழிபெயர்த்தது.]

ஆனால் அவர்கள் இவற்றை எல்லாம் விட மிகவும் பெரிதும் நன்மையுமான காரியத்தைச் செய்திருக்கின்றனர். ஏனென்றால் உலகத்தில் மிகவும் கீர்த்தியான சிருஷ்டிகளாகச் சொல்லப்படுகிற நேர்மையும் நல்லொழுக்கமுமுள்ள ஸ்திரீ புருஷர்கள் அவர்களுடைய பாதங்களில் தான் சிக்ஷையடைந்தவர்களாயிருக்கிறார்கள்.

டிமெஸ்டர் தன் தாயாரைப் பற்றி மிகுந்த அன்புடனும் பூஜ்யதையுடனும் தன்னுடைய கடிதங்கள் புஸ்தகங்களிற் பேசுகிறார். அவளுடைய கண்யமான ஒழுக்கமானது ஏனைய ஸ்திரீகள் அனைவரையும் அவருடைய பார்வையில் பூஜ்யராக்கிற்று. அவளைத் தன்னுடைய "பரிசுத்தமான தாயாகவும்" சொற்பகாலத்திற்குச் சரீரத்தைக் கடவுள் தந்தருளப் பெற்றதோர் தெய்வமாகவும் விவகரித்தனர். அவருக்கு நல்லொழுக்கத்தில் நாட்டம்பிறந்ததும், நற்குணத்தில் அவருக்குப் பிரியமுண்டானதும், எல்லாம் அவளாலேயே என்று சொன்னார். தக்க வயது பெற்று, பீட்டர்ஸ்பர்க் நியாயசபையில் தூதராக வேலைசெய்யுங்கால் அவளுடைய மேன்மையான நிதர்சனமும் விதிகளுமே அவருடைய ஆயுள்காலத்தில் பிரதானமான அதிகாரத்தையுடையவையென்று சொன்னார்.

சாமுவேல் ஜான்சன், வெறுப்பும் சுகமில்லாததுமான குணத்தை வெளியங்கமாயுடையவராயினும், அவருடைய ஒழுக்கத்தில் மிகவும் மனோகரமான பாகம் என்னெனில், அவருடைய தாயாரைப் பற்றி ஸ்திரமாய்ப் பேசிய உருக்கமேயாம். அவள் திடமான ஞானமுடையவள். அவர் ஒப்புக்கொள்ளுகிறபடி, மதசம்பந்தமான முதற் கருத்துக்களை அவளே அவருடைய மனசில் ஸ்திரமாய் ஊன்றினவள். அவருடைய மிகவும் கஷ்டகாலங்களிலுங்கூட தன்னுடைய அற்பவயதிலிருந்து அவளுடைய சௌக்கியத்திற்குப் போது

மானபடி உபகரிப்பது அவருடைய வழக்கம். புத்திரக் கடமையில் அவருடைய கடைசிச் செய்கையானது அவளுடைய சொற்பக்கடனை நிவர்த்திக்கவும் அவளுடைய அந்திய காலச் செலவைப் பொறுக்கவும் கருதி ராசெலஸ் என்னும் புஸ்தகத்தை எழுதினதேயாம்.

ஜார்ஜ்உவாஷிங்டனுடைய தகப்பன் இறந்தபொழுது அவருக்குப் பதினொரு வயது. ஐந்து பிள்ளைகளில் அவர்தான் மூத்தவர். கைம்பெண்ணாகிய அவருடைய தாயார் நிறைந்த பணமுடையவளாய் நல்ல வேலைச் சாமர்த்தியமும் சிறந்த காரிய நிருவாஹ சக்தியும் மிகவும் திடமான ஒழுக்கமுமாகிய அரிய நற்குணங்களை உடையவளாய் இருந்தாள். அவள் பிள்ளைகளைப் படிப்பித்து வளர்க்கவும், பெரியகுடும்பத்தை நடத்தவும், மிகுந்தசொத்தை ஆளவும் வேண்டியிருந்தது. அவற்றை யெல்லாம் முற்றிலும் திருப்திகரமாய் நடத்தினாள். அவளுடைய நல்லறிவும் ஜாக்கிரதையும் உருக்கமும் தாராண்மையும் எச்சரிக்கையுமாகிய குணங்கள் ஒவ்வொரு இடையூற்றையும் கடப்பதற்கு அவளுக்குச் சக்தியைக் கொடுத்தன. அவளுடைய குழந்தைகளெல்லாம் உலகத்தில் அவர்களுக்குக் கிடைத்த உத்தியோகங்களைத் தங்களுக்கும், தங்களுடைய கொள்கைகளையும் நடத்தையையும், பழக்கங்களையும், உண்டாக்குவதற்கு ஏக சாதனமாய் இருந்த தங்கள் தாயாருக்கும், சமமாகக் கண்ணியத்தை கொடுக்குமாறு நிர்வஹித்து சபகுசகத்துடன் முன்னுக்கு வந்ததால் அவர்களைப்பார்த்து இன்பமடைவதே தன்னுடைய கஷ்டத்திற்கும் தான்பத்திற்கும் பிரதிபலனாகப் பெற்றனள்.

கிராம்வெல்புரோடெக்டர் உடைய சரித்திரக்காரர் அவருடைய தகப்பனுரைப்பற்றி ஒன்றும் பிரஸ்தாபியாமல் தாயாருடைய ஒழுக்கத்தைப்பற்றி விசேஷமாய் எழுதுகின்றனர். அவளை அரிய ஊக்கமும் ஸ்திரபுத்தியும் உடையவளாக விவரிக்கின்றனர். வேறு யாதோர் உதவியுமில்லாவிடத்துத் தன் பலம் என்னும் மகிமை பெற்ற சாமர்த்தியமுடையவளும், மிகவும் நிர்ப்பாக்கியமானஸ்திதியிலும் காலத்திற்கிணங்கி நடக்க ஆயத்தமானவளும், தன்னுடைய சாந்தத்திற்கும் பொறுமைக்கும் தக்கவாறு ஊக்கமும் பலமும் உடையவளுமா

யிருந்து, தன் சொந்தப் பிரயாசையால், தனக்குச்சமானகௌரவமுள்ள வர் தன்னினுமிஞ்சிய செல்வமுமுடைய வம்சங்களில் தன்ஐந்து புத்திரிகளையும் விவாஹஞ்செய்யத்தக்க சீதனங்களைக் கொடுத்தனள். அவளுடைய ஒரே பெருமையானது, யோக்கியதையும், அவள் இச்சையானது அன்பாகவுமிருந்தது. அவள் ஹண்டிங்டன் பழையபதிராபகசாலையில் வாழ்ந்துவந்த அற்ப உணவு உடை மாதிரியை ஒயிட் ஹாலிலுள்ள பெரிய அரண்மனையிலும் அனுசரித்து வந்தனள். அவளுடைய சகல பிரதாபங்களின்மத்தியிற் றன்னுடைய புத்திரனை அபாயகரமான உயர்ந்த ஸ்தானத்திலிருந்து கெட்டுப்போகாமற் காப்பதே அவளுக்கு முக்கியகவலையாயிருந்தது.

நெப்போலியன்போனபார்ட் உடைய தாயாரின் திட ஒழுக்கத்தைப்பற்றி முன் பேசியிருக்கிறோம். டியூக்வில்லிங்டன் உடைய தாயாரும் அவளுக்குக் குறைந்தவளல்லள். அவளுடைய குமாரர் லக்ஷணத்திலும் சரீரத்திலும் ஒழுக்கத்திலும் வியக்குமாறு அவளை நிகர்த்தனர். ஆனால் அவருடைய தந்தை முக்கியமாய்க் கானநூல் உண்டாக்கி அதனை நடத்துவதில் கீர்த்தி பெற்றிருந்தார். உவில்லிங்டனுடைய மாதா அவரை மூடனென மாறுகக்கொண்டனள். ஏனென்றால் பிற்காலத்தில் அவருடைய செய்கைகள் அவரைக்கொண்டு பெருமை பாராட்டும்படி அவளை நிர்ப்பந்திக்கும் வரை ஏதோ சிலமூகாந்திரத்தால் அவளுடைய மற்றக்குழந்தைகள் மீதுள்ளபிரியம் அவரிடத்தில் அவளுக்கு இல்லாதிருந்தது.

நேப்பியர்கள் நல்ல பெற்றோரையுடைய பாக்கியவான்கள். ஆனால் முக்கியமாய் லேடிஸாராலென்னக்ஸ் என்னும் சீமாட்டியாகிய தங்கள் தாயாராற்றான் விசேஷபாக்கியம் பெற்றனர். அவள் சிறு வயதிலேயே தன் புத்திரருடைய மனதில் மேலான யோசனையும் மேலான செயல்களை வியக்கலும், யுத்தத்திற்குரிய ஊக்கமுமாகிய குணங்களை உண்டாகச் செய்தனள். அவை அவர்களுடைய ஆயுசு காலத்திற் கலந்து, அவர்கள் கடமைக்கும் கண்ணியதைக்கும்; தங்கள் உயிரைக் கொடுக்கும்வரை அவர்களைத் தாங்கிவந்தனள்.

மந்திரிமார், நியாயவாதிகள், குருக்கள்மார் ஆகிய இவர்களுள் லார்ட்சேன் ஸெல்லர்ஸ் பேக்கன், ஏர்ஸ்ன், புரோவாம் ஆகிய இவ

ர்களுடைய தாய்மாரைப்பற்றி விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவரனைவரும் சிறந்த சமர்த்தர்கள். கேன்னிங், கர்ரேன், ஆடம்ஸ் பிரசிடெண்ட், ஹெர்பர்ட், பேலி, வெஸ்லி ஆகிய இவருடைய தாயாரைப்போலவே அவர்களும் சிறந்த கல்வியுடையவர். லார்ட் புரோவாம் என்பவர் புரோபெஸர் ராபர்ட்ஸன் என்பவரின் சகோதரியாகிய தன்னுடைய பாட்டியைப்பற்றிக்கிட்டத்தட்ட பூஜிதையான மொழிகளிற் சொல்லுகிறதாவது:—விசாரித்தறிவதற்குப்பலத்த விருப்பத்தையும்,அவருக்கு ஆயுசு முழுதும் லட்சணமாயமைந்த, சகல விதமான ஞான ஆராய்ச்சியிலும் இடையறா ஊக்கத்தின் முதற்கொள்கையையும் தன்மனசில் புகுத்தற்கு அவள் சாதனமாயிருந்தனள் என்பதே.

கேன்னிங் என்பவருடைய தாயார் இயல்பிலே மிகவும் திறமையுடைய ஒரு ஹரிஸ் ஸ்திரீயாயிருந்தாள். அவள் விஷயத்தில் அவளுடைய பாக்கியமுள்ள குமாரன் ஆயுசுபரியந்தம் மிகுந்த அன்பும் மரியாதையுமுடையவனாயிருந்தான். அவள் சாதாரணமேதாவியல்லள். அவ்வாறு நிலைத்த அன்பினுக்கு விஷயமான அவளிடத்தில் அவருக்குள்ள ஆழ்ந்த உருகிய அன்பைச் சிந்திப்பதில், வேறு காரணம் கண்கூடான உறுதியுடன் கிடைத்தாலன்றி, அவளிடத்தில் அரியமேலான குணங்கள் இருந்திருக்கவேண்டுமென்று சித்தாந்தம் செய்யாமல் தீராதுயென்று கேன்னிங் உடைய ஜீவ்யசரித்திரக்காரர் கூறுகின்றனர். "அவள் வாசஸ்தலத்தின் சுற்றுப்பக்கங்களில் அவளை விசேஷித்த மன ஊக்கமுள்ள ஸ்திரீயாக மதித்தனர். அவளுடைய சம்பாஷணையானது தீக்ஷண்யமாயும் பலமூட்டுவதாயுமிருந்தது. சாதாரணமான நடப்பினின்றும் புதிதும் விசேஷமுமான விஷயங்களைத் தெரிந்தெடுத்து பிரத்தியேகமும் சுயமான யுக்தியோடு அவள் பேசுவாள். அவளிடத்தில் சொற்பமாய்ப் பழகினவர்களுக்கும் அவளுடைய நடக்கையானது ஒருவாறு விசேஷமான தோற்றத்தையுடையதாயிருந்தது" எனவுங் கூறுகின்றனர்.

கர்ரேன் என்பவர் தன்னுடைய தாயைப்பற்றி சுயமானதிட அறிவையுடையவளாக மிகுந்த அன்போடு சொல்லுகிறார். அவள்

*

குழந்தைகளுடைய மனசில் ஜாக்கிரதையுடன் உறுத்திய அறிவுள்ள ஆலோசனை, நிலைமாறுதபக்தி, கண்ணியமான அதிகாரவிருப்பு ஆகிய இவைகளாற்றான், தம் வாழ்நாளில் தாம் மேன்மை பெற்றதாக முக்கியமாய்ச் சொல்லுகிறார். பின்னும் அவர் வழக்கமாய்ச் சொல்வதாவது "என் ஏழைத்தந்தையிடம் பெற்றுப் பெருமை பாராட்டக் கூடிய ஓரே பிதிரார்ஜிதம் யாதெனில் அவருடையதைப்போன்ற மனோகரமில்லாத முகமும் சரீரமுமாகிய அற்பப்பொருள் என்பால் வாய்ந்து நின்றதேயாம். வதனம், உடலம், தனம் இவற்றிலும் சிறந்ததொன்று என்பால் உளதென இவ்வுலகம் கூறின், அது மிகவும் அன்புள்ள தாயார். அவளுடைய அறிவின் பொக்கிஷத்தினின்றும் சிறிது பாகம் குழந்தையாகிய எனக்கு வழங்கியதேயாம்."

வேலை நீங்கிய பிரசிடெண்ட் ஆகிய ஆடம்ஸ் என்பர் போஸ்டனின் பாலிகா பாடசாலையில் பரிசோதனையாகும்போது கூட இருக்கையில் அம்மாணவரால் அவருக்கு ஆழப் படும்படியான ஓர் வந்தனோபசாரப்பத்திரிகை வாசிக்க, அதை அவர் அங்கீகரித்துச்சொல்வதில் ஸ்திரீகளுடைய சிக்ஷையும் சாவகாசமும், தமது நடத்தையிலும் ஒழுக்கத்திலும் செலுத்திய நிலைத்த அதிகாரத்தைப் பற்றிக் கூற அவருக்குச் சமயம் வாய்த்தது. அவர் சொன்னது வருமாறு. "நான் குழந்தையாயிருக்கையில் மனுஷ்யனுக்கு அருளிய பாக்கியங்களில் விசேஷமானதை நான் அனுபவித்தேன். அதாவது தன்னுடைய குழந்தைகளின் ஒழுக்கங்களைச் செவ்வனே செய்ய ஆவலும் ஆற்றலுமுள்ள தாயைப்பெற்றதேயாம். முக்கியமாய் மத சம்பந்தமும் சன்மார்க்கமுமான போதனையானது என் ஆயுசில் நீடித்தகாலம் என்பால் நிகழ்ந்தமட்டும் அவளிடத்தினின்றே நான் பெற்றேன். அது பூரணமாயாவது வேண்டிய வண்ணமாவது இருந்ததாகச் சொல்லமாட்டேன். ஆனால் என் ஜீவகால நடப்பில் என்னிடத்திலுள்ள குற்றங்குறை அவளுடையகற்பனையைவிட்டுவிலகல் ஆகிய இவையனைத்தும் எனது தோஷமேயன்றி அவளுடைய தன்றெனநான் சொல்வதுதான், நான் பூஜிக்கிற அவளை ஞாபகப்படுத்தற்குப் பொருந்திய நீதியாயிருக்கின்றது."

வெஸ்லி குடும்பத்தார் தங்கள் தந்தையைப் பார்க்கிலும் தாயார்தங்கள் மனசை வசப்படுத்தித் தங்கள் ஒழுக்கங்களை விருத்திசெய்

தபோதிலும் இயல்பான பக்தியினால் தங்கள் பெற்றோர் பால் விசேஷப்பற்றுடையராயிருந்தனர். தந்தையானவர் திடசித்த முடையராய், ஆனால் சில சமயத்தில் குடும்பத்தோடு நடந்து கொண்டதில் கொடூரமும் கொடுமையுமுள்ளவராயிருந்தார். ஆனால் தாயானவள் அறிவின் மிக்கபலத்தோடும் உண்மையின் விசேஷ விருப்புடனும் சாந்தமாயும் வசப்படுத்துபவளாயும் ஆசாபாசமுள்ளவளாயும், நிஷ்கபடமுள்ளவளாயுமிருந்தாள். அவள் தன் குழந்தைகளுக்குப் போதகராயும் சந்தோஷமான தோழமையாயுமிருந்து தன் நிதர்சனத்தால் அவர்களை வரவரநல்லொழுக்கப்படுத்தினாள். அவளுடைய குழந்தைகளின் மனசில் மதசம்பந்தமான காரியங்களில் அவரால் கொடுக்கப்பட்ட அபிப்பிராயத்தைக்கொண்டுதான், பாலிய வயசிலேயே மெத்தாடிஸ்ட்ஸ் என்று அழைக்கும்படியான தன்மையை அவர்கள் அடைந்தனர். சாமுவேல் வெஸ்லி 1709-ம் வருஷத்தில் வெஸ்டுமினிஸ்டரில் மாணாக்கனாயிருந்தபொழுது அவள் அவனுக்கு எழுதின கடிதத்தில் சொல்லுமாறு. "உன்னுடைய வேலையை ஒல்லுமாறு ஒருதிட்டமான ஒழுங்கில் நடத்தும்படி நான் உனக்குப் புத்திசொல்லுகிறேன். அதனால் ஒவ்வொரு மதிப்பேறிய நிமிஷத்தையும் விருத்தி செய்து உன்னுடைய ஒவ்வொரு கடமையையும் செலுத்துவதில் சொல்லமுடியாத சுலுவைப் பெறப்பழகுவாய்" என்பதே. அவள் தன்னுடைய மகனை எல்லாக்காரியங்களிலும் நெறிபற்றி நடத்தத்தூண்டுதல் செய்துகொண்டே இந்தத் திட்டமான ஒழுங்கை வரையத் தொடங்கினாள். சகோதரர்களாகிய ஜானும், சார்லஸும், பிற்பாடு ஆக்ஸ்போர்ட்டில் ஸ்தாபித்த சபையானது பெரும்பாலும் அவளுடைய புத்திமதிகளின் பயனாக இருந்திருப்பதாய் எண்ணப்படுகிறது.

கவிஞர் வித்வான்கள் சிற்பர்கள் இவர்கள் விஷயத்தில் அவர்களுடைய தாய்மாரின் உணர்ச்சியும் உருசியும் தங்கள் குழந்தைகளின் யூகத்தை நடத்துவதில் மிக்க பயனுடைத்தாயின வென்பதில் சந்தேகமின்று. கிரே, தாம்ஸன், ஸ்காட்சௌத்தி, புல்வெர், ஸ்சில்லர், கோதி, என்னும் இவர்களுடைய ஜீவ்ய சரித்திரங்களில் இதனை முக்கியமாய் விளக்கியிருக்கக் காண்கிறோம். கிரே என்பவர் தன்

னுடைய தகப்பனார் குரூரமும் துர்க்குணமுமுள்ளவராயிருக்க, அவருடைய தாயாரிடத்திலிருந்து பக்ஷமும் நேசித்தலுமாகிய சுபாவத்தை முற்றிலும் ஸ்வீகரித்தனர். உள்ளபடியே அவர் கூச்சமும் அடக்கமும் ஊக்கமின்மையுமாகிய பெண்தன்மையுடையவரும் ஆனால் நடக்கையிலும் ஒழுக்கத்திலும் முற்றிலும் தோஷமற்றவருமாயிருந்தனர். அந்தக் கவியின் தாயார் தன்னுடைய யோக்கியமில்லாத பர்த்தா தன்னைவிட்டு நீங்கிய பிற்பாடு அந்தக் குடும்பத்தை ரட்சித்தாள். அவளுடைய மரணததில் அவளை அனேகம் குழந்தைகளுக்குக் கவலையும் உருக்கமுமுள்ள தாயென்றும் அந்தக் குழந்தைகளில் ஒருவன்தான் அவளுக்குப்பின் ஜீவிக்கும்படியான நிர்ப்பாக்கியத்தை அடைந்தானென்றும் கிரே என்பவர் சிலாசாசனத்தில் வரைந்து ஸ்டோக் போஜியில் அவளுடைய கல்லறையின்மீது வைத்தார். அந்தக் கவிதானும், தன்விருப்பப்படி அவளுடைய பூஜ்யதையுள்ள கல்லறையின் பக்கலில் புதைக்கப்பட்டார்.

ஸ்ச்சில்லரைப்போலவே கோதி என்பவருக்கும் விசேஷமான புத்திபாக்கியத்தையுடைய தன்னுடைய தாயாரால் மனமும் ஒழுக்கமும் நெறிப்பட்டன. அவள் சந்தோஷப்போக்குள்ள விநோதசுபாவத்தையுடையவள். தன்னுடைய மிகுதியான அனுபவவைப்பினின்றும் இவ்வுலக ஒழுக்கசாஸ்திரத்தை இளமையும் சுறுசுறுப்புமானவர்களுக்குக் கற்பித்து அவர்களைப் பிரேரிக்கும் தந்திரத்தை விசேஷமாய் உடைத்தாயிருந்தாள். ஒரு வைபாக்கியமுள்ள பிரயாணி அவளுடன் நெடுங்காலம் சந்தித்துப் பழகிய பின்னர் "கோதியென்பவர் மனுஷனாயிருப்பது எவ்வாறு என்பதை இப்பொழுதுதான் அறிகிறேன்" என்று சொன்னான். கோதி அவளுடைய ஞாபகத்தை அன்புடன் ஆதரித்துவந்தார். ஜீவிக்க யோக்கிய மானவள் அவளே என்று அவர் ஒரு சமயம் அவளைப்பற்றிச் சொன்னார்:— அவர் பிராங்போர்ட்டுக்குப் போனபொழுது தன் தாயாரிடம் பக்ஷமாயிருந்திருந்த ஒவ்வொருவரையும் தேடிப்பிடித்து அவர்களெல்லாருக்கும் வந்தனஞ்செய்தனர்.

ஆரிஸ்க்கெப்பர் உடைய சிற்பவித்தையை ஊக்கப்படுத்தித் தான் மிகுந்த கஷ்டப்பட்டு மிச்சப்பிடித்துக் கொடுத்த வகையினின்

னும் அவ்வித்தையை மேற் செலுத்தும்படி செய்தது அவருடைய தாயாரே. அவளுடைய அழகிய உருப்பிலக்கணங்களை பீட்ரைஸ் ஸெயின்ட்மோனிக்கா பின்னுமுள்ள அவருடைய படங்களில் வரைந்துகாட்டுமாறு மிகுந்த அன்புகொண்டவராயினர். ஹாலண்டு தேசத்து டார்ட்டிரஸ்ட் பட்டணத்தில் வசிக்கும்பொழுது அவரை ப்படிக்கிறதற்கு முதலில் லில்லிக்கும் அப்பால் பேரிஸ் நகரத்திற்கும் அனுப்பினாள். அவள் பிரிந்திருந்தபொழுது அவள் அவருக்கெழுதின கடிதங்களில் எக்காலமும் தாய்க்குரிய ஆழ்ந்த புத்திமதியும் அன்புள்ள மெல்லியலார்க்குரிய உருக்கமும் நிறைந்திருந்தன. அவள் ஒரு சமயம் எழுதியவாறு "நான் உன் படத்தை முத்தஞ்செய்வதையும், அப்பால் சிறிது நேரங்கழித்துத் திரும்பவும் அதை யெடுத்து என் கண்ணில் நீருடன் உன்னை 'என் அன்புள்ள குமாரனே' என அழைப்பதையும் நீ பார்ப்பையேல், உன்னைக்கண்டிப்பான வார்த்தைகள் சொல்லி அதிகாரம் செய்து உனக்குத் தற்காலவருத்தத்தை உண்டாக்குகிறதற்குக்காரணம் எது வென்பதை நீயறிவாய். ஜாக்கிரதையாய் வேலைசெய், எல்லாவற்றையும்விட நாணமும் தாழ்மையுமுள்ளவனாயிரு, மற்றவர்களை விட மிஞ்சினவனாக உன்னை நீ காணும்பொழுது நீபுரிந்துள்ளவற்றை பிரகிருதியோடு அல்லது உன்னுடைய சொந்த மனதில் நீ கற்பித்துக்கொண்ட உயர்வுற்ற உருவத்தோடு ஒத்துப்பார். அதிற்புலப்படும் வேறுபாட்டால் அகம்பாவமும் துர்அபிமானமும் ஆகிய இவற்றின் பயனைவிட்டு நீ தப்பித்துக்கொள்வாய்.

(இன்னும் வரும்.)

---

ஸ்ரீ:

# பிரதமவித்தியாப்பியாசப்பிரகடனம்.

(௫௪௮-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

அப்படியானால், எல்லாக்கிராமத்தாரையும் தாமே கட்டிடம் கட்டிக்கொள்ளும்படியாகக்கேட்டுக்கொண்டு தாம்கொடுக்கும்திரவியத்தைக் கைத்தொழில்களைக்கற்பிப்பதற்கே உபயோகப்படுத்தினால்

நாட்டுக்கு அதிகநன்மை உண்டாகுமல்லவா? மேலும், சுவர் ஏற்பட்டபிறகல்லவோ அதனழகுக்குச் சித்திரமெழுதவேண்டும். அதுபோல, பாடசாலைகள் உறுதிப்பட்டபிறகுதானே கட்டிடம் தேடவேண்டும். எந்தவியாபாரத்திலும் இதுவரையில் எவ்விடத்திலும் முதலில் வியாபாரமுறுதியானபிறகுதானே அதற்கு ஒருகட்டிடமேற்படுத்திக்கொள்வது வழக்கமாயிருக்கிறது. இருப்புப்பாதைவண்டி நிலை, தபால்சாலை, வியாபாரஸ்தலம் முதலானவைகள் முதலில் சொற்பமாக ஆரம்பித்து அதுநிலைப்பட்டபிறகுதான் கட்டிடங்கள்கட்டி உறுதிப்படுத்தப்படுகின்றன? இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பாடசாலைமுதலானவைகளும்அநேகமாய் அப்படிப்பட்டவையேயன்றோ?

## 23. கிராமங்களில் படிப்பு மிகவும் குறைவாயிருப்பதைக் காட்டும் கணக்கு.

இப்பொழுது இச்சென்னை ராஜதானியில்,

| | | | | |
|---|---|---|---|---|
| லக்ஷத்திற்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள நகரங்கள் | | | | 3 |
| 50,000 முதல் லக்ஷம்வரை | | ,, | ,, | 8 |
| 20,000 ,, | 50,000 | ,, | ,, | 31 |
| 10,000 ,, | 20,000 | ,, | ,, | 111 |
| 5,000 ,, | 10,000 | ,, | ,, | 339 |
| 1,000 ,, | 5,000 | ,, | ,, | 10,328 |
| 1,000க்குக் குறைந்த | | ,, | ,, | 44,019 |
| | | | ஆகமொத்தம் | 54,839 |

ஆகவே, 492 நகரங்களும், 54,347 கிராமங்களுமிருக்கின்றன. அதாவது, கொஞ்சம்குறைய 55,000 ஊர்களிருக்கின்றன. 1,000 க்குக்குறைந்த குடித்தொகையுள்ள 44,000 கிராமங்களில் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் பிரதமவித்யாப்யாஸ பாடசாலைகளும், 1,000-க்கு மேல்பட்டு 5000-க்கு உள்பட்ட 10,300 கிராமங்களில் த்விதீயவித்யாப்யாஸ அடிப்படைப் பாடசாலைகளும் இருந்தால்தேசத்துக்கு வெகுக்ஷேமமுண்டாகும்.

இப்போதுள்ள பிரதம வித்யாப்யாசபாடசாலைகள் 20,057. அவைகளில் படிக்கும் பிள்ளைகள், சிறுவர்களும் சிறுமிகளும் 6,72536 இவைகளில் 1903-4-ல் பரீக்ஷையிலே தேறினபிள்ளைகள் 19,323.

இந்தக்கணக்குப்படி பிரதமவித்யாப்யாஸப்பாடசாலைகளில் படிக்கும் சிறுவர்கள் 100-க்கு 27-பேரும், சிறுமிகள் 100-க்கு 4-பேருமேயாவர். மற்றவர்கள் படிப்பில்லாமலே மூடர்களாயிருக்கிறார்கள்.

இப்போது இருக்கிற த்விதீயவித்யாப்யாஸஅடிப்படைப்பாடசாலைகள் 567, அவைகளில்படிக்கும் பிள்ளைகள், சிறுவர்களும் சிறுமிகளும் 61,000.

இந்த 61,000 பிள்ளைகளில் 1904-5-ல் த்விதீயவித்யாப்யாஸ அடிப்படைப்பரீக்ஷைக்குப்போனவர்கள் 6,805-பேர்; அந்தவகுப்பில் படியாமல் தனியே பரீக்ஷைக்குப்போனவர்கள் 5,673 பேர். இதில் தேறினவர்கள் 1,579-பேர்.

ஆகவே, பரீக்ஷையில் தேறினவர்கள், மொத்தம் படித்தபிள்ளைகளில் 40-ல் 1-பங்கும், பரீக்ஷைக்குப்போனவர்களில் 8-ல் ஒரு பங்குமாவர்.

பிரதமவித்தியாப்யாஸப் பாடசாலைகளில் படிக்கும் மொத்தம் பிள்ளைகள் $6\frac{3}{4}$-லக்ஷத்தில் கொஞ்சம்குறைய 20,000-பேர்களும், த்விதீய வித்யாப்யாஸஅடிப்படைப்பாடசாலைகளில் படிக்கும்61,000 பிள்ளைகளில் 1,579-பிள்ளைகளுமே பரீக்ஷையில் தேறினார்களென்று இதனாலேற்படுகிறது. இதற்குமேலான கலாசாலைப் பிரவேசபரீக்ஷைக்குப் போனவர்கள் 8,114; அவர்களில் தேறினவர்கள் 1,521.

## 24. தேசத்தில் சீர்திருத்தங்கள்செய்யவேண்டியவர் யார்?

தேசபரிபாலனவிஷயத்தில் குற்றங்குறை இருந்தால் அதைத்திருத்திக்கொள்ளத் தேசத்தாரே பாடுபடவேண்டும். தேசத்தார் ஒவ்வொருவரும் தாம்செய்யவேண்டிய காரியமின்னதென்பதை நன்றாகத் தெரிந்து கொள்வது அவசியம். பம்பாயில் முனிசிபாலிடியாரும், கோயம்புத்தூரில் உபாத்தியாயர்களும், சோளங்கிபுரத்தில் சித்தூர்

ஜில்லா ஜனங்களும், அதேவிதமாகக் கிருஷ்ணாஜில்லா ஜனங்களும் வித்தியாப்யாஸ விஷயமாய் ஸபைகூடியபொழுது, இத்தேசத்தில் வேதனமில்லாத படிப்பும் நிர்ப்பந்தப்படிப்பும் அவசியம் வேண்டுமென்று இராஜாங்கத்தாரைக் கேட்டுக்கொண்டார்கள். இதர தேசங்களில் ஏற்படுத்தியிருப்பதுபோல இப்படிப்பட்ட வேதனமில்லாத படிப்பையும் நிர்ப்பந்தப்படிப்பையும் இத்தேசத்திலும் இராஜாங்கத்தார் ஸ்தாபித்தால் தேசமெங்கும் கல்வி அதிசீக்கிரத்தில் பரவி விடும். இப்படித்தாமேசெய்ய அனுகூலப்படாவிட்டாலும், ஜமீன்தாரிகள், மிராசுதார்கள், மடாதிபதிகள், வர்த்தகர்கள் முதலான தனவந்தர்களை இராஜாங்கத்தார் சற்றுத் தூண்டிவிடுவார்களானால் இக்காரியம் எளிதில் கைகூடிவிடுமே. எப்படிப்பட்ட நல்லகாரியமானாலும் பிறர் தூண்டாமல் தாமே செய்கிறகுணம் இத்தேசத்தாருக்கு இல்லை. அப்படி இராஜாங்கத்தார் எப்பொழுது செய்வார்களோ?

இராஜாங்கத்தார் இக்காரியத்தைச்செய்து முடிக்கிறவரையில் நாம் காத்துக்கொண்டிருந்தால், நாட்டுப்புறத்துப் பிள்ளைகளுடைய கதி என்னவாகிறது. கிராமத்தாரெல்லாம் ஒன்றுகூடிப்பாடுபட்டால் தமதுபிள்ளைகளைப்படிப்பிக்கிறது அவர்களுக்கு அசாத்தியமான காரியமா? பிள்ளைகள் பெரிய பண்டிதர்களாகாவிட்டாலும், முழு மூடர்களாயிராமல் தம் தம் காரியங்களை நன்றாய்நடத்த, எழுதவும் படிக்கவும் கணக்குகள்போடவும் செவ்வையாய்த்தெரிந்துகொள்ள வேண்டாமா? தூரதேசத்திலுள்ள தம்பந்துக்களுக்கு க்ஷேமஸமாசாரமெழுதவும், அவர்களெழுதும் கடிதங்களைப்படிக்கவுங்கூடத்தெரியாமல், இவைகளுக்கும் பக்கத்தூரிலிருக்குமொருபடித்தவனண்டைபோய் அவனது தயவை யெதிர்பார்ப்பது மிகவும் பரிபவமல்லவா?

'அவரவர்களுடைய லாபநஷ்டங்கள் அவரவருக்கே நன்றாய்த் தெரியுமாகையால், ஒவ்வொருவரும் தம்முடைய நன்மையைத்தேடி அதற்குத்தக்கபடி நடந்துகொள்வார்கள். இப்படித் தனித்தனி ஒவ்வொருவரும் தம்முடைய நன்மையைத் தேடிக்கொண்டால் அதுவே தேசத்தினுடைய பொதுநன்மையாகும்' என்பது ஆடம் ஸ்மித்தினுடைய அபிப்பிராயம்.

'ஒருகூட்டத்தாரில் ஒவ்வொருவரும் தனித்தனிசொந்தநன்மைக்காகப் பாடுபட்டாலும், அது கூட்டத்தாருடைய சிறந்தபொது நன்மைக்கு ஸாதகமாக மாட்டாது. தனித்தனி ஜனங்கள் பலர்கூடித் தேசத்தாராகிறார்கள்; பலதேசத்தாரும் சேர்ந்து உலகத்தாராவார்கள். தேசத்தார்பலரும் ஒன்றுவதற்குப்பாஷையும், நடையுடை பாவனைகளும் ஒற்றுமைப்படுவதும், படிப்படியாய் ராஜாங்கத்தாருடைய உதவியால் பிரஜைகள் விருத்தியடைதலும், ராஜாங்கத்துச் சட்டதிட்டங்களுமாகிய இவைகளே முக்கிய காரணங்களாம். இவைகளால் பிரஜைகள் ஒவ்வொருவருக்கும் தேசத்திற்கும் பொருளுக்கும் பத்திரம் க்ஷேமலாபங்கள், ஏற்றம், நாகரிகத்தேர்ச்சி இவைகள் உண்டாகும்' என்று ஜர்மன் நூலாசிரியர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

## 25. இத்தேசத்தில் வித்யாபிவிருத்தி விஷயமாகச்சுதேச வித்யாபிவிருத்தி சங்கத்தார்செய்துவரும்முயற்சிகள்.

சென்ற மேமீ 3வ ஷை சங்கத்தாருடைய காரியதரிசி ஆனரபில் சிவஸ்வாமி அய்யர் அவர்கள் பலபாடசாலைத் தலைமை உபாத்தியாயர்களுடைய அபிப்பிராயம் தெரிந்துகொள்ள ஒருபத்திரிகை பிரசுரம் செய்திருக்கிறார். அதில் அவர் கேட்டிருக்கும் கேள்விகளாவன:—

1. ஒவ்வொரு கிராமத்திற்கு ஒன்றாயினும், அடுத்திருக்கும் பலகிராமங்களுக்கு ஒன்றாயினும், வித்யாவிசாரணைத்தலைவரால் ஏற்படுத்தப்படும் சட்டத்தை அனுசரித்து, வித்யாப்யாஸத்தை மேல் விசாரணை செய்யவும், பாடசாலைக்குக் கொடுக்கவேண்டிய திரவியத்தைச் சரியாகப்பாகித்துச் செலவிடவும் ஐந்துபேர் அடங்கிய ஒருபாடசாலைச் சபையேற்படுத்தவேண்டியது அவசியமல்லவா?

விடை. பெரும்பான்மையோர் அப்படியே ஸ்தாபிக்கவேண்டுவது அவசியமென்று ஸம்மதித்து மறுமொழியெழுதியிருக்கிறார்கள். நாட்டுப்புறத்தில இவ்வளவுபெரியகாரியம் செய்யும்படியான படிப்பாளிகள் இல்லையென்று சிலர் ஆக்ஷேபிக்கிறார்கள்.

*

இவர்களது ஆக்ஷேபணையானது, நீந்தக் கற்றுக்கொண்டபின் தடாகத்தண்டை போகவேண்டுமென்பது போலிருக்கிறது. லோகல் பண்டாருடைய மேல்விசாரணையில் இருக்கவேண்டு மென்பது வித்தியாவிசாரணைத்தலைவருடைய அபிப்பிராயம்; வித்தியா விசாரணைத்தலைவரைப்போலவே லோகல்பண்டாரும் தூரத்திலிருப்பவர்களே அல்லவா? கிராமத்தில் இருப்பவர்போல அடிக்கடி பாடசாலையைக் கண்காணித்துவர அவர்களால் ஆகுமோ?

படிப்பே தங்களுக்குவேண்டாமென்று சொல்லுகிற நாட்டுப்புறத்தாருக்குப் படிப்பின்பெருமையை விளங்கத்தெரிவிக்க அந்தந்த கிராமத்தில் ஒருபாடசாலைச்சபை இருப்பது நலமேயன்றோ?

பிறதேசத்து இடையர்கள் சிறுகுழந்தைகளுக்கு ஒருபால் ஏற்படுத்தி, 'நெஸில்ஸபால், கைபடாதது, ஏடுநிறைந்தது' என்று விளம்பரம்செய்து எல்லாத்தேசங்களிலும்விற்று விசேஷமாக லாபமடைகிறார்களே! நமது இடையர்களுக்கும் சிறிதளவு படிப்பிருந்தால் இப்படிப்பட்ட வியாபாரம்செய்து இவர்களும் வேண்டிய விசேஷமான லாபமடையலாமல்லவா? இப்படியே குயவன், கருமான், பயிர்த்தொழிலாளி முதலானவர்களும் படிப்பினால் பொருள் ஸம்பாதிக்கலாமென்பதை நாமெடுத்துச்சொல்லவேண்டுவதில்லையே.

முன்காலத்திலே கிராமங்கள்தோறும் பஞ்சாயத்தார் ஏற்பட்டிருந்தார்கள். அவர்களே அந்தந்தக் கிராமத்தைச்சேர்ந்த சகலகாரியங்களையும் சரியாக நடத்திவந்ததினால், கிராமத்தார் விருத்தியடைந்து வந்தார்கள். "இந்துக்கள் விருத்தியடைவதற்கு முக்கியமாகத் தன்முயற்சிவேண்டும்," என்று ஓடானல் என்பவர் சொல்லுகிறார்.

1882-ம் வருஷத்தில் ரிப்பன்பிரபுவினாலேற்படுத்தப்பட்ட எஜுகேஷன் கம்மிஷனர்கள், அங்கங்குள்ள பாடசாலைகளை ரெவின்யூ உத்தியோகஸ்தர்களும், மற்றுமுள்ள ராஜாங்கத்து உத்யோகஸ்தர்களும், இதரரான மனுஷியர்களும் கண்காணித்து வரவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார்கள்.

இந்தியா துரைத்தனத்தார் ஐந்து வருஷத்திற் கொருமுறை வித்யாவிஷயமாய் விசாரணைசெய்து வருகிறார்கள். அவற்றில் 92-93, 96-97-ஆகிய ஐந்து வருஷத்து விசாரணை விளம்பரத்தில் முக்கியமாய்ப் பிரதம வித்யாப்யாஸ பாடசாலைகளை அந்தந்த ஜில்லாவின் தலைமை உத்தியோகஸ்தர் கண்காணித்து வரவேண்டுமென்று கண்டிருக்கிறது.

ஜில்லாவின் தலைமை உத்யோகஸ்தரும் மற்றரெவினியூ உத்யோகஸ்தரும் பலதொல்லைகளிலிருப்பவர்களானையால், பிரதமவித்யாப்யாஸ பாடசாலைகள் முழுமையும் கண்காணிக்க அவர்களுக்கு அவகாசம் கிடைக்குமா? கிராமத்துப்பாடசாலைச் சபையார் இப்பாடசாலைகளை நடத்திவருவார்களானால், அவ்வுத்யோகஸ்தர் மேல் விசாரணை மாத்திரம் சுலபமாகச் செய்து வரக்கூடும்.

நமது இந்துதேசத்திலே நாகரீகத்தேர்ச்சி அத்தனை அதிகமாயில்லாத மத்தியமாகாணத்தில் பாடசாலைச் சபைகள் ஏற்பட்டு நல்லவேலை நடந்துவருகிறது.

பாடசாலைச்சபை ஏற்பட்டால் சண்டையுண்டாகுமென்பது சிலருடைய ஆக்ஷேபம். சண்டைபோடும் குணமுள்ளவர் எப்போதுமே சண்டைபோடுவார்கள்; பாடசாலைச்சபை சண்டையைக் கூட உண்டாக்குமோ? சண்டைபோடும் குணமுள்ளவர் இச்சபையாரோடு சேர்ந்து ஒருகால் சாந்தகுணமுள்ளவரானாலுமாகலாமே.

2. பணத்தைப் பங்கிட்டுக்கொடுக்கவேண்டும் விதம் பரீக்ஷையின்மேலேயே நிர்மாணிக்கிறதா? அல்லது பாடசாலையின் திறத்தைப்பார்த்துத் நிர்மாணிக்கிறதா? இரண்டாவது பக்ஷமானால் பணம்பாகித்துக்கொடுப்பதற்கு அவசியம் வேண்டிய நியதமான விதிகள் என்ன?

விடை. இரண்டுவிதமாயும் அபிப்பிராயப்படுகிறார்கள். சிலர் அதிகமாகப்பிரயாசை எடுத்துக்கொண்டு வேண்டிய விதிகளும் எழுதி அனுப்பியிருக்கிறார்கள்.

வித்யாவிசாரணைத்தலைவரும் இரண்டுவிதமாயும் அபிப்பிராயப்படுகிறார். 141,000 சதுரமைல்விஸ்தீரணமும் 22 ஜில்லாக்

களும் அடங்கிய இந்த ராஜதானியிலுள்ள 240 தாலூக்காக்களிலிருக்கும் பரிக்ஷைவேதனப் பாடசாலைகளில் சென்றவருஷத்திலே பரிக்ஷிக்கப்பட்டவை 11,633; அப்பாடசாலைகளுக்குக் கொடுக்கப்பட்ட பரிக்ஷைவேதனம் $6\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய்; பரிக்ஷித்ததற்காகப் பிடித்த செலவு மொத்தம் ரூபாய் 5லக்ஷத்திற்கு மேலாகிறது.

பாடசாலைக்குச் செலவுக்கு எவ்வளவு தொகைவேண்டியதிருக்கிறதோ, அவ்வளவுதொகை இப்படி அதன் மேல்விசாரணைக்கும் வேண்டியதாயிருப்பது, கிராமத்தார் பாடசாலைகளை மேல்விசாரணை செய்யாத குறைவினாலேதானே.

(இன்னும் வரும்)

சே. இராஜகோபாலாசாரி.

---

# பஞ்சதந்திரம்.

:o:

இது, சம்ஸ்கிருதபாஷையினின்று தமிழிலே விருத்தமாகச் செய்யப்பெற்றதோர் அரிய நூலேயாகும். செந்தமிழ் ௩-ம் பகுதியில் "பஞ்சதந்திரம்" என்ற தலைப்பின்கீழ் ஸ்ரீ. S. சாமிநாதையரவர்கள் "இப்பஞ்சதந்திரக் கதைகளிற் சில மகாபாரதத்திற் காணப்படுகின்றமையால் இக்கதைகளுக்கு ஆதாரம் மகாபாரதமே எனத் தோன்றுகின்றது" எனக்கூறினார்கள். அவ்வாறு அவர்கள் அபிப்பிராயப்பட்டதற்குப்போந்த ஆதாரம் யாதென்பது புலப்படவில்லை. மகாபாரதத்திற் சிலகதைகள் காணப்படுகின்றமையால் மகாபாரதமே இக்கதைகளுக்கு ஆதாரமென்பது எவ்வாறு கொள்வது? சிலப்பதிகாரம் நீதிவெண்பா முதலிய நூல்களிற் சிலகதைகள் காணப்படுகின்றமையால் அவைகளைப் பஞ்சதந்திரத்துக்கு ஆதாரமென்று கொண்டாலென்னை? பஞ்சதந்திர நூலாசிரியர் முதனூல், வழியைக் கூறுகின்றதைப் பார்க்கும்போது ஐயரவர்கள் கூற்றோடு மிக முரணுகின்றது.

" மேதினிதனில்வியாழன்பராசரன்சுகன்வியாசன்
ஆதிசாணக்கியன்மாமனுவிவாறுவர்சொல்லும்
நீதிநூல்வழியேமிக்கநிறைமதிச்சோமசன்மா
ஓதியதந்திரத்தைத்தமிழினுலுரைசெய்வேனே. "

எனப் பஞ்சதந்திர நூலாசிரியர் முதனூல்வழியைக் கூறுகின்றமை யால், பஞ்சதந்திரம் மேற்கண்ட அறுவருஞ்செய்த நீதிநூல்களிலிருந்து திரட்டிச் செய்ததாக விளங்குகின்றது.

இந்நூல் பாடலிபுரத்தரசனுன சுதரிசனன், தன் புதல்வர்கள் மந்தமதியினராயிருத்தல்கண்டு கவன்றபோழ்து, அவைக்களத்தேயிருந்த நுண்ணறிவாளராய சோமசன்மா என்னும் விப்பிரசிரேட்டராலே, அரையன் புதல்வர் பேரறிவாளராம்பொருட்டுச் செய்யப்பட்டது. இந்நூல், மித்திரபேதம், சுகிர்லாபம், சந்திவிக்கிரகம், அர்த்தநாசம், அசம்பிரேட்சியகாரித்துவம் என்னும் ஐந்து பகுப்பாய்ப் பகுக்கப்பெற்று ஐம்பத்தெட்டுக் கதைகளையுடையது. அறிவை வளர்த்தற்குரிய பலபல கதைகளிருப்பினும் அவைகள் பஞ்சதந்திரத்துக்கொப்பாகா. தாண்டவராய முதலியாரவர்கள் தமிழ்ப் பஞ்சதந்திரத்து விருத்தப்பாவினின்றும் வசன நடையாக்காமல் கன்னடபாஷையிலிருந்து மொழிபெயர்த்து வசனநடையாக்கினதற்குக் காரணம் யாதென்று புலப்படவில்லை.

இதோபதேசத்தின் பாயிரத்திலே, பாடலிபுரத்தரசனுன சுதரிசனன் புதல்வர்பொருட்டு விஷ்ணுசர்மன் என்னும் பண்டிதனுற் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. ஆனல், பஞ்சதந்திரத்தின் பாயிரத்தும் மேற்கண்டவாறே சொல்லப்படுவதாயினும், அங்கே சோமசன்மா என்பவராற் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. பஞ்சதந்திரத்துக் கதைகளும் இதோபதேசத்துக் கதைகளும் பெரும்பான்மையும் வித்தியாசமுடையவைகளாயிருக்கவில்லை.

இதோபதேச நூலாசிரியர், பஞ்சதந்திரத்திலும் வேறு கிரந்தங்களிலுமிருந்தெடுத்து தாம் இதோபதேசம் செய்ததாகச் சொல்லுகின்றார். ஆனல், பஞ்சதந்திரமுண்டாயகாலத்து ஒரு சுதரிசனனும் இதோபதேசமுண்டாயகாலத்து வேறொரு சுதரிசனனும் இரு

ந்திருக்கவேண்டும். ஒரு சுதரிசனனாயின் அவன் காலத்தே அவன் புதல்வர்களுக்கு ஒரே கதையை வேவ்வேறு பெயர்புனைந்து என் செய்தார்களென்னும் ஆசங்கை இங்கே நிகழத்தக்கது.

இங்ஙனம்,

காரை. கா. சிவசிதம்பர ஐயர்.

---

# புத்தகக் குறிப்பு:

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்:—ஸ்ரீபரஞ்சோதிமுனிவர் திருவிளையாடலின் வேறானதும் அதனிலும் பழமைபெற்றதுமான திருவிளையாடலொன்று நம்நாட்டில் அங்கங்கே ஏட்டுப்பிரதியிலுண்டென்பது, பலர் கண்டும் கேட்டுமிருப்பர். இப்போது அந்நூல் அச்சிடப்பெற்றிருக்கின்றதை அறிய நம்மவர் மகிழ்ச்சியுறுவரென்பதில் ஐயமில்லை. அம்மகிழ்ச்சிதானும், மேற்குறித்த நூல், மஹாமஹோபாத்தியாயர் ப்ரும்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்களால் வெளியிடப்பெற்றதென்று கேட்க, பின்னும் விரிந்து பெருகுமென்பது திண்ணம். இந்நூல் பழைய திருவிளையாடல், வேம்பத்தூரார் திருவிளையாடல் எனவும் வழங்கும். இஃது இயற்றியோர் "செல்லிநகர்ப் பெரும்பற்றப்புலியூர்நம்பி" என்னும் பெரியார். இந்நூலின் செய்யுட்டொகை கஎருங. இது பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடலோடு பலவிடங்களில் வேறுபட்ட கதைக்கூற்றுக்களைக் கொண்டது. இதற்குக்காரணம் அவ்விரண்டற்கும் வெவ்வேறு வடநூல்கள் மூலமாயிருப்பதேயாம். இதனாசிரியரது அருமைபெருமைகளை இங்கே நாம் விரிக்கவேண்டுமென்னும் எண்ணமில்லை. ஏனெனில் அவை ஐயரவர்களாலே நூன்முகப்பில் தெள்ளிதின் விளக்கப்பட்டுள்ளன. ஆதலால் இங்கே அந்நூற்பதிப்பைப்பற்றி மட்டுஞ் சிறிது எழுதக்கூடும். இப்பதிப்பானது, ஐயரவர்களிடத்து நம்மவர் வைத்துள்ள பெருமதிப்பைப் பின்னும் பல மடங்கு அதிகரிக்கச்செய்வதொன்றாகும். இந்நூலில் அமைந்துள்ள விசேடங்களை

யெல்லாம், பல இனியகுறிப்புக்களுடன், படிப்போர் வியப்பும் உவப்பும் அடையும்படி ஐயரவர்கள் துருவிக்காட்டியிருக்கின்றார்கள். இதுவரை வெளிவராத பல புதுச்செய்திகள் அவர்கள் ஆராய்ச்சியில் நிரம்பித்ததும்பக் காண்கின்றோம். திருவுத்தரகோசமங்கை என்பது, தேவாரத்துட்காணப்பெறாத தலமென்று இதுவரை கருதப்பட்டுவந்ததை, அஃது "அதியறையமங்கை" என்னும் பெயரால் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் வாக்கில் அமைந்திருத்தலை விளக்கியிருப்பதும், ஸ்ரீ திருவாதவூரடிகள் வரலாறு "குடமுழநந்தீசனை வாசகனாக்கொண்டார்" என அச் சுவாமிகளாலே கூறப்பட்டிருத்தலைக் காட்டியிருப்பதும், ௬௪-திருவிளையாடல்களில் "நான்மாடக்கூடலானது" "கிழியறுத்தது" "வலைவீசியது" "வளையல் விற்றது" "ஞானோபதேசஞ்செய்தது" "மண்சுமந்தது" "விருத்தகுமார பாலரானது" "அங்கம் வெட்டினது" "திருமுகங்கொடுத்தது" "வேதமுணர்த்தியது" முதலியன, அப்பர் திருஞானசம்பந்தசுவாமிகளது தேவாரங்களுட் பயிறலைக் குறித்திருப்பதும் நம்மைப் பெரிதும் வியப்புறுத்தலோடு, திருவாதவூரடிகள் காலம்பற்றி எழுந்துள்ள எண்ணங்கள் சிலவற்றை நீக்கத்தக்க கருவிகளாகவும் அமைந்துள்ளன. பின்னும் ஐயரவர்கள், நூலாசிரியர் வரலாற்றை ஆராய்ந்திருத்தலும், மதுரையினும் அதனைச்சூழ்ந்தவிடத்துமுள்ள பல அரியசெய்திகளை விளக்கியிருத்தலும், பிறபல குறிப்புக்களும் நம்மவரது உண்மையான புகழ்ச்சிக்கும் போற்றற்கும் உரிய நிலைக்களங்களாம். இவையன்றி, நூன்முழுதுக்கும் ஓர் அழகிய அரும்பதவுரை, யாவரும் எளிதில் நூலைப்படித்தறியுமாறு, எழுதப்பட்டும், நூற்பதிப்புக்கு அங்கமாகிய பல குறிப்புகளுஞ்சேர்க்கப்பட்டும்—எல்லாவழகுடனும் இப்பதிப்பு ஒளிர்கின்றது. ஐயரவர்களது ஆராய்ச்சிக்குட்பட்டு வெளியேறிய நூல்களில், அவ்வவற்றின் இயற்கையழகேயன்றி, செயற்கையழகெல்லாம் ஒருங்குபெறஅலங்கரிக்கப்பெற்றுவெளிவராதன யாவை? இவ்வாறு தமிழர்க்கோர் பெருநிதியாய்; தமிழ்த்தெய்வத்தின் பொருட்டே தம்முடல்பொருளாவிகளை ஒப்பித்து உழைத்துவரும் ஐயரவர்களதருமைபெருமைகள் தமிழ்நாட்டாரால் என்றேனும் மறக்கத்தக்கனவோ? அவர்கள் இவ்வாறே தமிழ்ப்பரிபாலனம் பண்ணும்படி, அவர்கட்கு நீடிய ஆயுளை அளித்தூக்குமாறு திருவருளை வேண்டு

மித்தனையல்லது வேறொன்றும் புனைந்து சொல்லுதலை அறிந்திலேம். இத்திருவிளையாடற் புராணத்தின் விலை ரூபா 2.

இராமாயணசாரம்:—இப்பெயர்கொண்ட நூல், தம்முடல்பொருளாவிகளை நம் பரதகண்டத்துக்கு என்றே ஒப்பித்துழைத்துவரும் அனிபெஸண்டு அம்மையாரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அழகிய நூல்களில் ஒன்றன் மொழிபெயர்ப்பு. இதன் பெயரைக் கேட்குமளவிலே இஃது இன்ன விஷயத்தைப் பற்றியதென்பது தானே விளங்கும்; ஆயினும் ஸ்ரீவான்மீகி முனிவரது "படிகொண்ட கீர்த்தி இராமாயணமென்னும் பத்திவெள்ளத்"திலே இறங்கி யாவரும் எளிதின் இன்புற மூழ்கிப் பெரும்பேறுபெறும்படி அமைக்கப்பெற்ற ஓர் அழகிய துறையென்று நாம் இதனைச் சிறப்பித்தல் மிகையாகாது. ஆங்கிலத்தில் அனிபெஸண்டு அம்மை செய்த அந்நூலின் அருமைபெருமைகளை நாம் இங்கு விரிக்கவேண்டியதில்லையாயினும், அதன் தமிழ் மொழிபெயர்ப்பொன்று அம்மூலத்தின் ஒளிநலஞ் சிறிதுங்குறையாது தமிழரும் அறிந்து சுவைக்கும்படி இயற்றப்பட்டிருத்தல் இங்கே புகழத்தக்கதன்றோ! இந்நூன்மொழிபெயர்ப்பில் ஆளப்பட்டுள்ள வசன நடை, ஏனையோரெல்லாம் ஒரு முன்மாதிரிகையாகக் கொள்ளற்கேற்ற அவ்வளவு இனிமையும் அழகும் கொண்டு சிறக்கின்றது. மொழிபெயர்ப்பேயாயினும் மூலத்தின் சுவைக்குச்சிறிதுந்தாழ்ந்ததென்று எமக்குத்தோற்றவில்லை. இப்புத்தகத்தை நம் நாட்டில் சிறுவர் முதற் பலரும் வாங்கிப்படித்தால், விரிந்து பரந்த ஸ்ரீராமசரிதத்தின் உண்மைப்பெருமைகள் எளிதில் விளங்குவதோடு, அநேக நற்குண நற்செய்கைகட்குப் பெருந்தூண்டுகோலாகிப் பரதகண்டத்தின் பழம் பெருமையைத் தலைக்கட்டற்கோர் ஏதுவாம். இந்நூலைச் சிலவருஷங்கட்கு முன்பு மொழிபெயர்த்துதவிய ஸ்ரீமத்-செய்யூர்-முத்தையமுதலியாரவர்கள் அன்புடன் எமக்கு ஒருபிரதி இப்போது அனுப்பியமைக்கு நன்றியறிதலுடையேம்.

இராஜராஜேசுவரி:—மேற்கூறிய முதலியாரவர்களால் இயற்றப்பெற்ற இராஜராஜேசுவரி என்னும் புத்தகமொன்றும் அவர்களால் எமக்கு அனுப்பப்பட்டுள்ளது. இஃது ஆங்கில மகாகவியாகிய ஷேக்ஸ்பியரது அற்புத நாடகங்களில் ஒன்றாகிய "ஆஸ்-யூ-லைக்-

இட்'' என்பதைத்தழுவித் தமிழர் சுவைக்கேற்பச் சமைக்கப்பட்டது. இக்காலத்து ஆங்கிலத்தினின்று மொழிபெயர்க்கப்படும் நூல்களை, அவற்றின் நடைப் போக்கு முதலியவற்றால் ''இது மொழிபெயர்ப்பு நூல்'' என்று பிறர் அறிவியாமலே துணிந்து சொல்லிவிடலாம். ஏனெனில், பிறநாட்டுமொழியின் சொல்வகை கருத்துவகைகட்கு ஏற்ற சொற்கருத்துக்களை நம்மவர் காணாது மிகுதியும் இடர்ப்படுவதேயாம். ஆனால், அவ்வாறு நூல்களை ஆக்குவோர் நேர்மொழிபெயர்ப்பாகவன்றி அவ்வவர் சுவைக்கேற்பத் தழுவிச்செய்யின், அக்குறைகட்கு அநேகமாக இடமிராது. முதலியாரவர்கள் மேற்கூறியவாறு, முழுதும் தமிழர் சுவையாகவே ஆங்கில நூலை ஆக்கித்தந்தமையால், மிகுதியும் ருசிக்கின்றது. இந்நூன் முகவுரையில் ஆங்கில நூலொன்றைத் தழுவிச்செய்யப்பட்டதென்பதை முதலியாரவர்கள் குறித்திராராயின் அஃது எப்போலியரால் அவர்கள் புத்தப்புதிதாக இயற்றியதென்றே எண்ணப்பட்டிருக்குமென்பதில் ஐயமில்லை. இந்நூலின் நடைப்போக்கும், நிரம்பித்ததும்பும் ரஸங்களும், நடையழகும் படிப்போரை இடர்ப்படாது இழுத்துச்செல்ல வல்லன. எம்மபிப்பிராயத்தில், இவ்வளவு அழகுவாய்ந்த தமிழ் நாடகம் எம்மால் அதிகமாகப்பார்க்கப்படவில்லையென்று தோற்றுகிறது. புத்தகத்தின் வெளியழகும் மனத்தைக் கவர்கின்றது. இதன் விலை, சாதாரண பைண்டு 9-அணாவும் நல்லபைண்டு 1-ரூபாவுமாகும்.

சுதேசவைத்தியரத்நம்:—இப்பெயர்கொண்ட வைத்திய நூலொன்று சமீபத்திற்கிடைக்கப்பெற்றோம். நமது பழைய வைத்திய முறைகளில் இக்காலத்துக்கேற்பனவற்றை மிகவுந்தெளிவாக இந்நூல் எடுத்துக்கூறுகின்றது. நமது பழைய ஆயுர்வேதமுறை, அக்காலத்து மானுட தேகக்கட்டுக்கேற்ப அமைக்கப்பட்டதனால், அந்நூல்களிற் கூறப்பட்ட மருந்தின் எடைப்பிரமாணங்கள், கூணித்துவருகின்ற இக்காலத்துத் தேக அமைப்புக்குப் பெரும்பான்மை பொருந்துவனவல்ல என நூலாசிரியர் நாட்டியுரைதல் நுணுக்கமான உண்மையேயாம். இந்நூலில் பலபதார்த்தங்களின் தன்மைகளை, நம்பெரியோர் கொள்கைகளுடனும் மேனாட்டுக்கொள்கைகளுடனும் கூட்டியாராய்ந்து மிகவழகாக விளக்கியிருத்தலால், இது நம்மவர் ஒவ்வொருவர் கையினும் இருந்து பயனளிக்கத்தக்கது என்னலாம். இவ்வாறு ஒரு நூலைத் தமிழர்க்குப் பெரிதும் உபயோகமாம்படி தொகுத்துத்தந்தவர் - ஹோமியோபாதிக் பிஸிஷன் - ஸ்ரீமத்-எஸ். சந்திரசேகரர் அவர்கள். இந்நூலின் விலை ரூபா ஒன்று என்று குறித்திருப்பது, நூலினளவை நோக்கும்போது அதிகமென்றே தோன்றுகிறது.

பத்திராசிரியர்.

சங்கத்தினின்று

# வெளிவரும் புத்தகங்கள்

சித்தமாய் விட்டன.

## 1. பன்னூற்றிரட்டு.

இரண்டாம் பதிப்பு.

---

மதுரைத்தமிழ்ச் சங்கத்து அக்கிராசனாதிபதியாகிய, பாலவனத்தம் ஜமீன்தார் ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்தேவரவர்களால், தமிழ் நூல்கள் பலவற்றையும் ஆராய்ந்து வெளியிடப்பட்ட இந்நூல், இப்போது புதியவாய் 500-பாடல்கள் பலநூலினின்று எடுத்துச் சேர்க்கப்பெற்று மதுரைத்தமிழ்ச்சங்கப்பதிப்பாக வெளிவருகின்றது. இப்புத்தகம் டிம்மி அக்டோவாவளவில் 48-பாரங்களுடையது. நல்ல காகிதத்தில் சிறக்க அச்சிடப்பட்டது. இந்நூலின் அருமை பெருமைகளும், தமிழ்மக்களொவ்வொருவர் கையிலும் இப்புத்தகமிருத்தற்குரியதென்பதும் தமிழுகம் அறிந்த உண்மையாதலால் அவற்றை இங்கே விரிக்க எண்ணமில்லை. இதன் விலை ரூபா இரண்டு. வேண்டுவோர் இப்போதே எழுதி பெற்றுக்கொள்ளக்கடவர்.

## 2. வைத்தியசாரசங்கிரகம்.

---

இராமநாதபுரம் சமஸ்தானம் ஸ்ரீமாந்-பொன்னுச்சாமித்தேவரவர்களால், பல வருஷங்கட்கு முன்பு தக்க சுதேசவைத்தியரைக் கொண்டு அநுபவசித்தமான மருத்துவ முறைகளை யாவரும் அறியும்படி செய்விக்கப்பட்ட இந்நூலானது, இப்போது இச்சங்கத்தில் செவ்வையாக ஆராயப்பெற்று, இன்னும் சில வேண்டியமையாத விஷயங்களும் சேர்த்து அச்சிடப்பட்டு முடிந்துள்ளது. ராயல் எட்டுப் பக்கத்தில், 70-பாரம் கொண்டது. ஒவ்வொருவர் கையிலும் இஃதிருத்தற்குரியது. இதன் விலை ரூபா. 3—0—0.

☞ இச்சங்கப்பதிப்பாகிய மேற்கூறிய புத்தகங்களும் பிறவும், நமது "செந்தமிழ்" ச்சந்தாதாரர்க்கு ரூபாவுக்கு 4-அணுத் தள்ளி விலைக்குத்தரும்படி சௌகரியஞ்செய்து கொடுக்கப்பட்டிருக்குஞ் செய்தி கவனிக்கத்தக்கது.

தபாற்கூலி பிரத்தியேகம்.

இங்ஙனம்,
மானேஜர்,
தமிழ்ச் சங்கம், மதுரை.

# T. R. Tawker & Sons,

*Mount Road, Madras.*




B. 159. பிரதி மாதங்களுக்கும் தேதிகாட்டும் காலெண்டர் பென்டெண்டு, பொன்னால் செய்தது விலை ரூ. 25முதல் 50வரையில்.



S. 273. வெகு அழகாகவும், வேலை பாடுள்ளதுமாகிய வெள்ளியினால் செய்த போட்டோபிரேம் விலை ரூ.50-முதல் 60-வரையில்.



B. 19. சரியான காலங்காட்டக் கூடியதுமான லீவர் வெள்ளி கைகெடிகாரம் நிச்சயமாய் உள்ளது. அழகு வாய்ந்தது விலை ரூ. 45.



J. 1053. காசிமாலை யெங்களிடம் அநேக விதமான புதியமாதிரிகள் இருக்கின்றது. வேண்டுபவர்களுக்கு தயார் செய்து கொடுக்கப்படும். விலை மாதிரி முதலிய விபரங்களை தபால் மூலமாய் யெழுதினால் தெரிவிக்கப்படும்.



J. 1021. கம்மல் ஜதை 1க்கு வைரத்தால் செய்தது விலை 1000-முதல் 2000-வரையில் பட்டை கெம்பில் விலை 250 முதல் 450-வரையில் சாதா கெம்பில் விலை ரூ. 100-முதல் 200-வரையில்.

S.T. 1. பொன் ஷர்ட் பொத்தான் விலை ரூ. 20-முதல் 30-வரையில் ரெடி வெள்ளியில் ரூ. 5.



J. 1037. வைர மூக்குத்தி நிருவாணி விலை ரூ. 200-முதல் 300-வரையில்.



J. 1039. வைரக்கல் சொருகுக்குத்தி விலை ரூ. 300-முதல் 500-வரையில்.



J. 866. பொன்னால் செய்த ஷர்ட் பொத்தான் விலை ரூ. 26-முதல் 36-வரையில் ரெடி வெள்ளியில் ரூ. 1.

**யெங்கள் ஷாப்பில் நகை முதலிய சாமான்கள் ரொக்கத்திற்கு வாங்குபவர்களுக்கு 100-க்கு ரூ. 10-வீதம் தள்ளிக் கொடுக்கப்படும்.**

**டி. ஆர். டாகர் அண்டு ஸன்ஸ்.**

# T. R. Tawker & Sons.

## Mount Road, MADRAS.

வைரம், கெம்பு, பச்சை, முதலிய நவரத்னங்களினல் அருமையான வேலைப்பாடுள்ள நகைகள் எங்களிடம் தயாராய் இருக்கின்றன நகைகளின் மாதிரி வேண்டுபவர்களுக்குத் தபால்மூலமாய் அனுப்பப்படும்.

எங்கள் ஷாப்பில் நகை முதலிய சாமான்கள் வாங்குபவர்களுக்கு 100-க்கு -வீதம் தள்ளிக்கொடுக்கப்படும்.



M. M. 1

ஒரு நாளைக்குச் சாவி கொடுத்தால் 400 நாளைக்கு ஓடக்கூடிய கெடியாரம்

இது வெகு வேலைப்பாடுள்ளது. அழகான டயல் உள்ளதும், சரியான காலங்காட்டக் கூடியதும், சாமானகளெல்லாம் உயர்ந்த கில்ட்டுக் கொடுத்ததும் மேலே கண்ணாடி மூடியுள்ளதுமானது. அழகும் ஆச்சரியமும் வாய்ந்தது. விலை ரூபா 45.

டி. ஆர். டாகர் அண்டு சன்ஸ்.

# T. R. Tawker & Sons.

வைரம், கெம்பு, பச்சை, முதலிய நவரத்தினங்களினால் அருமையான வேலைப்பாடுள்ள நகைகள் எங்களிடம் தயாராயிருக்கின்றன. நகைகளின் மாதிரி வேண்டுபவர்களுக்கு தபால் மூலமாயனுப்பப்படும்.









N. J. 184. கத்திரிபாவலி உயர்ந்த வைரங்களினாலும் சாவரன் பொன்னினாலும் செய்தது. விலை ரூ. 500 முதல் 800 வரையில் ஷெ பட்டைக்கெம்பில் விலை ரூ. 250 முதல் 400 வரையில் ஷெ சாதா கெம்பில் விலை ரூ. 150 முதல் 250 வரையில் பொன் உட்பட செய்யுங்கூலி ரூ 50. முத்துக்களின் விலை பிரத்தியேகம்.

J. 1027. புதுச்சேரி மாதிரி அட்டிகை. உயர்ந்த சாதா கெம்புகளினால் செய்தது. பதக்கம் உட்பட விலை ரூ. 200 முதல் 500 வரையில் இன்னும் அநேக மாதிரி அட்டிகைகள் இருக்கின்றன. வேண்டுபவர்கள் விலை முதலிய விபரங்களை தபால் மூலமாய்த் தெரிந்துகொள்ளலாம்.

J. 1012. உயர்ந்த வைரங்களினால் செய்த புலாகு வேலைப்பாடுள்ளது. விலை ரூ. 250 முதல் 600 வரையில்.





J. 988. நாகம் இது அருமையும் அழகும் வாய்ந்தது. அருமையான வேலைப்பாடுடன் உயர்ந்த வைரங்களினாலும் கெம்புகளினாலும் செய்தது. விலை ரூ. 600 முதல் 1,500 வரையில்.

J. 1018. கம்மல். வைரங்களினால் செய்தது விலை ரூ. 2000 முதல் 3,500 வரையில் ஷெ பட்டைக்கெம்பில் விலை ரூ. 550 முதல் 1000 வரை ஷெ சாதா கெம்பில் விலை ரூ. 250 முதல் 500 வரை.

எங்கள் ஷாப்பில் நகை முதலிய சாமான்களை ரொக்கத்திற்கு வாங்குபவர்களுக்கு 100-க்கு 10-வீதம் தள்ளிக்கொடுக்கப்படும்.

**டி. ஆர். டாகர் அண்டு சன்ஸ், மவுண்ட் ரோட், மதராஸ்.**

(No. 4.)

# PREVENTION BETTER THAN CURE.

---

A person with a well fortified system need have no fear of PLAGUE, SMALLPOX, CHOLERA or LUNG TROUBLES.

Disease always attacks the week and those whose run down systems can least resist it.

## SCOTT'S EMULSION

prevents illness, by building up and fortifying the week places in your body, thus enabling you to positively throw off disease.

---




NOT TOUCHED BY HAND.

---

*FOR SALE AT ALL CHEMISTS.*

---

SCOTT & BOWNE, LTD.,

MANUFACTURING

CHEMISTS,

LONDON, ENGLAND.

# CHAMBERLAIN'S PAIN BALM.

## உடம்பில் நோவுக்குச் சேம்பர்லேன் துரை செய்திருக்கும் தைலம்.




முதுகுபிடிப்பு, பக்கசூலை, கைகால் ஒய்ச்சல், தலைநோய், காயங்கள், இவைகளைத் தீர்க்கும்.

கீல்வாய்வையும், தீர்க்கும், தீர்க்கும், தீர்க்கும்.

## கீல்வாய்வு என்றால் என்ன?

கீலுக்குக் கீல் வீக்கமும வேதனையும், குத்தலும் குடைச்சலும், இழுப்பும வலிப்பும், உட்காரமுடியாது, உறங்கமுடியாது.

இப்படியெல்லாம இருந்தால், கீல்வாய்வுதான் என்று கொள்ளும்; தப்ப, சேம்பர்லேன் தைலத்தை வாங்கிகொள்ளும்.

நோவும் வீக்கமுமிருக்குமிடத்தில் தைலத்தைத் தேய்த்தவுடனே, உள் எலும்புவரைக்கும மருந்திறங்குவதை உணர்வீர். உடனே வேதனை குறையும. தைலத்தைத் தேய்த்துவர நாளடைவில் நோய் அடியோடு நீங்கும்.

இது, முழுவதும் மூலிகை. கைபடாமல் செய்தது.

எங்கும் விற்பது, எளிதில் கிடைப்பது.

சின்ன புட்டி ரூபா. 1. பெரிய புட்டி ரூபா. 2.